வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 16.10.2021 சனிக்கிழமை | இதழ் : 315 | பக்கங்கள் : 16




# எங்கள் கட்சிகளின் தலைவர்கள் கேட்டால் முதல்வர் வேட்பாளராக போட்டியிடுவேன்!



## பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஒக். 16

“எங்கள் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து நீங்கள் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் என்று என்னைக் கேட்டால் அது என்னுடைய கடமை என ஏற்று மீண்டும் களத்தில் குதிக்கத் தயாராக இருக்கின்றேன்”, என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வைத்து மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் 15

# படையல் உண்டவர் மயங்கிவீழ்ந்து பலி!

வடமராட்சி, ஒக். 16

வீட்டுப் பூசை வழிபாட்டின் பின்னர் சுவாமிக்கு படையலிடப்பட்ட அவல், கடலையை உட்கொண்ட மூதாட்டி மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கரணவாய் - அந்திரன் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில், 15

# 17,18ஆம் திகதி போராட்டம் குறித்து மாவை, சித்தர், செல்வம் கைவிரிப்பு!

## அவை கூட்டமைப்பின் ஏற்பாடு அல்லவாம்







யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 16

நாளையும், நாளை மறுதினமும் எம். ஏ. சுமந்திரன் எம். பி. விடுத்த போராட்ட அழைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடையதல்ல. அத்துடன், போராட்ட அழைப்பு குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்றும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் தலைமைகளும் தெரிவித்துள்ளன. 15

# நாளைய போராட்டம் தொடர்பில் மீனவர் சங்கங்களுக்கு தெரியாது

யாழ்ப்பாணம், ஒக். 16

நாளை ஞாயிற்றுக்கிழமை இழுவைப் படகு மீன்பிடிக்கு எதிராகப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதுவரை மீனவர் அமைப்புகளுடன் எந்த விதமான தொடர்புகளையும் ஏற்படுத்தவில்லை என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளன உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார். 15

# கொரோனாவால் 20 பேர் மரணம்!

கொழும்பு, ஒக். 16

நாட்டில் மேலும் 20 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர்.

11 ஆண்களினதும், 9 பெண்களினதும் மரணங்கள் இவ்வாறு பதிவாகியுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டன என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 449 ஆக உயர்வடைந்துள்ளது.

இதில் 30 வயதுக்கு உட்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்தார். 15

# போராட்டத்துக்கு சகலரும் ஆதரவளிக்க வேண்டும்!

## சுமந்திரன் எம். பி. அழைப்பு

(செய்தி 14ஆம் பக்கத்தில்)

# 666 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, ஒக். 16

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 666 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. 15

# இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு தேவை

## பிரதமர் மோடிக்கு ஸ்டாலின் அவசர கடிதம்

சென்னை, ஒக். 16

இலங்கைக் கடற்படை சிறை பிடித்துள்ள 23 அப்பாவி மீனவர்களை உடனே விடுவிக்கவும், இந்தியா - இலங்கை மீனவர் பிரச்னைக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு காணவும் நடவடிக்கைகள் எடுக்கக் கோரி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் 15

# லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் எரிபொருள் வழங்கல் நிறுத்தம்!

கொழும்பு, ஒக். 16

லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிக்கும் செயற்பாடு இந்திய ஓயில் நிறுவனத்தினால் (IOC) இடைநிறுத்தப்பட்டுள்ளதாக எல்.ஐ.ஓ.சி எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 15



# கொரோனாவுக்கு பின் குழந்தைகளை தாக்கும் நோய் நிலைமை அதிகரிப்பு!

## நான்கு குழந்தைகள் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 16

கொரோனாவுக்கு பின் குழந்தைகளுக்கு ஏற்படும் "மல்டிசிஸ்டம் இன்ஃப்ள மேட்டரி சிண்ட்ரோம்" என்ற நோய் நிலைமை அதிகரித்துள்ளதாக லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் நளின் கிதுல்வத்த தெரிவித்துள்ளார்.

குறித்த நோய் பாதிப்பு குழந்தைகளின் பல்வேறு உடல் பாகங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிலை கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி 2 முதல் 6 வாரங்களுக்குப் பிறகு ஏற்படுகிறது. என்றும், தற்போது, 6 குழந்தைகள் ரிட்ஜ்வே லேடி குழந்தைகள் மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இது போன்று 78 குழந்தைகளுக்கு லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் நான்கு பேர் இறந்தனர். இந்த நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 150 குழந்தைகள் இதுவரை சிகிச்சை பெற்றுள்ளனரெனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# முதியவர் சடலமாக மீட்பு!

வடமராட்சி, ஒக். 16

வடமராட்சியில் கிணறு ஒன்றிலிருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

பருத்தித்துறை - புலோலி தெற்கு - வைரவர் கோயிலடி - ஆண்டியார் வளவை சேர்ந்த பெரியதம்பி கணேசராசா (வயது 85) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

வீட்டு வளவில் பின்பக்கமாகவுள்ள கிணற்றிலிருந்து இவரின் சடலம் நேற்றிரவு மீட்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை நடத்தினார். (ஐ-2)

**கல்வி TV CHANNEL-1**

**16.10.2021 சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

# வடக்கில் நேற்று 12 தொற்றாளர்!




யாழ்ப்பாணம், ஒக். 16

வடக்கு மாகாணத்தில் நேற்று 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ். போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் நேற்று 89 பேரின் மாதிரிகள் நேற்று பி. சி. ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே 12 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, யாழ். போதனா மருத்துவமனையில் 3 பேர்,

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 03 பேர்

நொதேர்ன் சென்றல் மருத்துவமனையில் 02 பேர் என யாழ். மாவட்டத்தில் 8 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

இதேபோன்று, முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் இருவருக்கும், மன்னார் பொது மருத்துவமனையில் ஒருவருக்கும், வவுனியா நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

# தனது தவறுக்கு பிராயசித்தம் தேடினார் பொலிஸ் அதிகாரி!




யாழ்ப்பாணம், ஒக். 15

வரலாற்று பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி காலணியுடன் நுழைந்த பொலிஸ் அதிகாரி தனது தவறை திருத்தும் முகமாக நேற்றைய தினம் தொண்டைமானாறு ஆலயத்திற்கு சென்று வழிபாடாற்றினார்.

இது தொடர்பில் ஸ்ரீ செல்வ சந்நிதி முருகன் கோவில் என்ற தனது முகநூல் பக்கத்தில் "கடந்த சில நாட்களுக்கு முன்பு எம் பெருமாள் ஆலயத்தினுள் பாதணிகளுடன் வருகை தந்த பொலிஸ் உத்தியோகத்தர் தான் செய்த தவறினை திருத்தும்முகமாக இன்று (15.10.2021) எம் பெருமாள் ஆலயத்துக்கு வருகை தந்து வழிபாடுகளில் ஈடுபட்டார். தவறுகள் செய்யாத மனிதன் இல்லை அந்த தவறுகளை திருத்தாதவன் மனிதனே இல்லை..." என்று பதிவிட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை காங்கேசன்துறை பிராந்தியத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொட்டாச்சி என்பவர் காலணிகளுடன் வரலாற்று பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி, வல்லிபுர ஆழ்வார் ஆலயங்களுக்குள் காலணிகளை கழற்றாது உள்ளே சென்றிருந்தார். இது தொடர்பில் இந்து மக்கள் கடும் அதிர்ச்சியும் எதிர்ப்பும் வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

**கல்வி TV CHANNEL - 2**

**16.10.2021 சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# வடக்கின் நிர்வாக கட்டமைப்பு விரைவில் மறுசீரமைக்கப்படும்!

## ஆளுநர் ஜீவன் தியாகராஜா

யாழ்ப்பாணம், ஒக். 16

வடக்கு மாகாண நிர்வாகக் கட்டமைப்பு மறுசீரமைப்பு செய்யப்படும் என்றும் அதனைச் செய்யாவிடின் தன்னை விமர்சிக்குமாறும் புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றின் கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்ற அன்றைய தினமே தனது கடமைகளையும் தாம் பொறுப்பேற்றுக் கொண்டாரெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் இருவரும் மாகாண நிர்வாகக் கட்டமைப்பில் புதியவர்கள். அந்த சவால் எப்படி இருக்கும் என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

"அப்படி எதுவும் இல்லை. இருவருக்கும் அனுபவம் உண்டு. பெரிய குழுக்களுடன் பணியாற்றுபவர்கள்" என்று ஆளுநர் ஜீவன் தியாகராஜா பதிலளித்தார்.

இதேசமயம், வடக்கு மாகாணத்தில் ஒக்ரோபர் 21ஆம்



திகதி தரம் 1 - 5 வரையிலான 639 பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்றும் ஆளுநர் கூறினார். (ஐ)

Eelanadu
16.10.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# தென்னிலங்கை அரசியலில் மாற்றங்கள்?

மாகாண சபை தேர்தல் தொடர்பான செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்து, தென்னிலங்கை அரசியலில் சூழல் சற்று பரபரப்படைந்திருப்பதாகவே தெரிகின்றது. ஆளும் பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகள் புதிய கூட்டணி தொடர்பில் கலந்துரையாடி வருகின்றன என்று செய்திகள் வெளிவருகின்றன. ஏற்கனவே, பொதுஜன பெரமுனவிற்கும், பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் இருக்கும் நிலையில், பங்காளிக் கட்சிகள் தங்களைப் பலப்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றன. இந்த அடிப்படையில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில், புதிய கூட்டணி ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பில் அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகள் முன்னரைப்போல் பலமான நிலையில் இல்லை. அவர்கள் அவ்வப்போது தெரிவிக்கும் கருத்துக்களிலிருந்தே இதனைத் தெளிவாக அறிய முடிகின்றது. தேர்தல் காலத்தில் மிகவும் கம்பீரமாக இருந்த விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்களின் குரல்கள் வலுவிழந்து காணப்படுகின்றன. இந்த பின்புலத்தில்தான் அவர்கள் அவ்வப்போது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் முகாமிடுகின்றனர். ஒருவேளை மாகாண சபை தேர்தலில் தங்களால் குறிப்பிட்டளவு வெற்றியைப் பெற முடியாது போனால், தாங்கள் அரசாங்கத்திலிருந்து முற்றிலுமாக ஓரங்கட்டப்பட்டுவிடலாம் என்னும் அச்சம் அவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கலாம். அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட முடியாதவர்கள் வெளியேறலாம் என முன்னர் ஒருமுறை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

பொதுஜன பெரமுனவை பொறுத்தவரையில் அவர்களின் வெற்றியென்பது முற்றிலும் ராஜபக்ஷ சகோதரர்களின் சாதனை. பங்காளிக் கட்சிகளுக்கு இதில் எந்தவொரு பங்கும் இல்லை. பங்காளிக் கட்சிகள் ராஜபக்ஷ சகோதரர்களுடன் இருக்கும் வரைக்கும்தான் அவர்களால் அரசியலில் பிரகாசிக்க முடியும். வெளியில் சென்றால் அவர்கள் செல்லாக் காசுகள். கிட்டத்தட்ட இலங்கை தமிழ் அரசு கட்சியினர், ரெலோ மற்றும் புளொட் ஆகிய பங்காளிக் கட்சிகள் தொடர்பில் இப்படியானதொரு பார்வையைத்தான் கொண்டிருக்கின்றனர்.

இந்த பின்னணியில்தான், மாகாண சபை தேர்தலுக்கு முன்னர், தங்களைப் பலப்படுத்திக்கொள்ள பங்காளிக் கட்சிகள் முயற்சிப்பதாகத் தெரிகின்றது. பங்காளிக் கட்சிகள் அனைவருமே ஏற்கனவே, சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இருந்தவர்கள்தான். அந்த வகையில் மீண்டும் தங்களின் தாய்வீட்டிற்கு செல்வதில் அவர்கள் மத்தியில் எந்தவொரு தடையும் இல்லை. சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் தங்களை பலப்படுத்திக் கொண்டு, அவர்கள் பொதுஜன பெரமுனவுடன் பேரம் பேசலிலும் ஈடுபட வாய்ப்புண்டு. மாகாண சபை தேர்தலில், முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் சில நிபந்தனைகளை அவர்கள் முன்வைக்கலாம். அந்த நிபந்தனைகளுக்கு பொதுஜன பெரமுன உடன்படாத பட்சத்தில், அவர்கள் தனித்து செல்ல வாய்ப்புண்டு.

தற்போதைய சூழலில், அரசாங்கம் ஏறுமுகத்தில் இல்லை. கடுமையான வீழ்ச்சியை சந்தித்திருக்கின்றனர். இந்த நிலையில் பங்காளிக் கட்சிகள், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஒரு பலமான கூட்டணியை உருவாக்குவார்களாயின், அது நிச்சயம் ராஜபக்ஷக்களின் தேர்தல் வெற்றியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். ஒருவேளை, பங்காளிக் கட்சிகள் இந்த நிலைமையை, தங்களுக்கு சாதகமான ஒன்றாகக் கணிக்கவும் வாய்ப்புண்டு.

தங்களின் தேர்தல் வெற்றி நெருக்கடிக்கு உள்ளாகுமாயின், தேர்தலை பிற்போடவும் அரசாங்கம் பின்நிற்காது. ஆனால், ஒரு பலமான எதிரணி கூட்டு அமையுமாக இருந்தால், அரசாங்கம் நிச்சயம் நெருக்கடிகளை சந்திக்க நேரிடும் என்பதில் சந்தேகமில்லை. இந்த விடயங்களை துல்லியமாக மதிப்பிடாமல், அரசாங்கம் ஒரு தேர்தலுக்கு முகம் கொடுக்குமா என்பது சந்தேகமே!

# சம்பந்தரின் 'வாழ்க்கையோடு விளையாடும்' கூட்டமைப்பு உறுப்பினர்கள்!

- அலசுவது இராஜதந்திரி -



*ஓரிரு தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனின் காலத்துக்கு பின்னர் தமக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய தகுதி இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.*

*இதன்பின்னனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் காலத்துக்குப் பின்னர் ஒரு கூட்டுத்தலைமையின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்கும் என்று கூறியுள்ளார். அத்துடன், சம்பந்தருக்குப் பின்னரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் பற்றி எம். ஏ. சுமந்திரன் கூறியவை அவரின் தனிப்பட்ட கருத்து எனவும் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார்.*

*முதுமையின் உச்சக்கட்டத்தை எட்டிள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தமிழ் அரசியல் தரப்பில் தம்மை அரசியலுக்கு அறிமுகஞ்செய்த பல சிரேஷ்ட அரசியல்வாதிகளும் இக்கட்டான காலகட்டங்களில் அகால மரணங்களை தழுவிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருந்தார்.*

*அவர் எந்தவொரு கட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துக்காக வரிந்து கட்டிக்கொண்டு நிற்கவோ அல்லது போட்டியிடவோ இல்லை.*

*இரா. சம்பந்தனின் ஆளுமையுள்ள தலைமைத்துவம் கிடைத்திராவிட்டால் வடக்கு - கிழக்கு அரசியலில் மட்டுமல்ல. சர்வதேச ரீதியாகவும் தமிழ் அரசியல் தரப்பு ஒரு பலவீனமடைந்த நிலையையே கொண்டிருக்கும்.*

*1977ஆம் ஆண்டுக்கு பின்னர் இரா. சம்பந்தனின் தலைமையின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கையில் ஓர் எதிர்க்கட்சியாகவும் இலங்கைப் பாராளுமன்றத்தில் செல்வாக்குச் செலுத்துமளவிற்கு மாற்றம் கண்டிருந்தது.*

*இரா.சம்பந்தனின் அரசியல் பிரவேசம் 1977ஆம் ஆண்டில் ஆரம்பமாகியிருந்தது. திருகோணமலையில் ஒரு பிரபல சட்டத்தரணியாக விளங்கிய இரா. சம்பந்தன் அரசியலுக்கு வருவதற்கு ஆரம்பத்தில் வெகுவாக தயக்கம் காட்டியிருந்தார். ஆயினும், அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபரான அ. அமிர்தலிங்கம் மற்றும் அக்காலத்தின் தமிழ் அரசியல் முக்கியஸ்தர்கள் பலரின் வற்புறுத்தலின்பேரிலேயே சம்பந்தன் அரசியலில் காலடி வைத்ததுடன் - இன்று வரை தமது ஆளுமையை வயோதிபத்தின் மத்தியிலும் நிலைநாட்டியவராக இருக்கின்றார்.*

*வடக்கு - கிழக்கு அரசியலில் ஆயுதப் போராட்டம் ஒருபுறமும் அரசியல் ரீதியான போராட்டம் மறுபுறமுமாக தலைதூக்கியிருந்த காலகட்டத்தில் ஒரு கயிற்றின்மீது சமநிலை பேணி நடக்கவேண்டிய இக்கட்டான நிலை இரா. சம்பந்தனின் தலைமைத்துவத்துக்கு ஏற்பட்டிருந்தது.*

*இருந்தபோதிலும் தமிழ் ஆயுதப் போராளிகளையும் மறுபுறத்தே தென்னிலங்கை அரசியல் தரப்பையும் வெற்றிகரமாகத் தமது அரசியல் தலைமைத்துவம் மூலமாக இரா. சம்பந்தன் கையாண்டிருந்தார். ஆயினும், வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்ப்பது தொடர்பாகவும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மற்றும் ஆயுதப் படையினர் கையகப்படுத்திய வடக்கு - கிழக்கின் நிலப்பகுதிகளை மீளப் பெறுவது போன்ற விடயங்களில் இரா. சம்பந்தனின் தலைமைத்துவம் குறிப்பிடத் தக்க வெற்றிகளைப் பெறவில்லை என்றே குறிப்பிடமுடியும்.*

*வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தமையே கடந்தகால தேர்தல்களின் முடிவுகள் வெளிப்படுத்தியிருந்தன. இருந்தபோதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் கடந்த சில வருடங்களாக பிரச்னைகள் தலைதூக்கியுள்ளமையையே அவதானிக்க முடிகின்றது. இதன்வெளிப்பாடாகவே தற்போது இரா. சம்பந்தனின் காலத்துக்குப் பின்னரான தலைமைத்துவம் பற்றியும் கூட்டமைப்புக்குள் சர்ச்சைகள் தோன்றியுள்ளன.*

*தமது தலைவர் உயிரோடிருக்கும் காலப் பகுதியிலேயே அவரின் மறைவு குறித்தும் அதன் பின்னரான கூட்டமைப்பின் தலைமைத்துவம் குறித்தும் பிரஸ்தாபிக்குமளவுக்கு ஓர் அநாகரிமான அரசியல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நிலவுவதைக் காணமுடிகின்றது. இதன்காரணமாக இரா. சம்பந்தன் கூட மன உளைச்சலுக்குள்ளாகும் சூழ்நிலைகளும் தோற்றம்பெறும் என்றே அறிய முடியும்.*

*எது எப்படியிருந்தபோதிலும் இரா. சம்பந்தனுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலம் குழப்பகரமானதாக இருக்குமென்றே ஊகிக்க முடிகின்றது. இரா. சம்பந்தனின் வாழ் நாளிலேயே அவருக்குப் பின்னரான தலைமைத்துவத்தைப் பற்றி பிரஸ்தாபித்து முரண்படுவதை நோக்குகையில் தென்னிலங்கையின் "பேரினவாத பருந்துகளுக்கு தமிழ் அரசியல் என்ற குளத்தைக் கலக்கி இரைபோடும்" கைங்கரியத்தை தமிழ் அரசியல் தரப்பு இப்போதே ஆரம்பித்து விட்டதென்றே குறிப்பிடமுடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



தமிழ்நாடு



ஒக்ரோபர் - 16 சனிக்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 30

நல்ல நேரம் : 7.30 - 09.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : ஏகாதசி



## இன்றைய ராசிபலன்

16.10.2021

**மேடம்**
பெரியவர்கள் மூலம் இன்று நன்மை அடைவீர்கள். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். பல பணிகளை கவனிப்பீர்கள். குடும்பத்தின் கலகலப்பை அதிகரிக்க முயற்சி எடுப்பீர்கள்.

**இடபம்**
பண வரவும், செல்வாக்கும் மேலோங்கி மகிழ்சி தரும். கூடுதல் செலவு ஒன்று இருக்கும். குதூகலமான நாள் வாழ்க்கைத்துணையின் உடல் நலம் மேம்படும்.

**மிதுனம்**
பணியாளர்களுக்கு வேலைச்சுமை குறையும். யோகமான நாள். பிறரின் மனம் புண்படப்பேசி அதன் மூலம் சிரமப்பட வேண்டாம். குழந்தைகளிடம் சற்றுப் பொறுமையுடன் நடப்பது நல்லது.

**கடகம்**
எதிராளியை புரிந்துகொள்ள முயற்சித்து சிரமத்திலிருந்து தப்பலாம்.நண்பர்கள், உறவினர்களின் வருகை மிகுந்த நன்மை தரும் உங்களின் செயல்பாடுகள் பணியிடத்தில் மதிப்பை ஏற்படுத்தும்.

**சிம்மம்**
பேச்சுகள் சாதகமாக முடியும். கோபம் குறையும். பெற்றோரின் ஆரோக்கியம் மேம்படும். மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்கள் மேல் மற்றவர்களுக்கு இருந்த மதிப்பு அதிகரிக்கும்.

**கன்னி**
புதிய பொறுப்புகளும், பதவிகளும் வரும். குடும்ப மகிழ்ச்சி கூடும். பலநாட்களாக மனதில் இருந்து வந்த தடுமாற்றம் நீங்கும். பணியிடத்தில் புதிய நபர்களின் வரவுகள் இருக்கும்.

**துலாம்**
உங்களின் திறமைகள் கூடும். பாராட்டும் பரிசும் கிடைக்கும். பணியில் எதையும் சமாளிக்கும் தன்னம்பிக்கையை பெறுவீர்கள். சாப்பிட, தூங்க நேரமின்றி உழைக்க வேண்டி வரும்.

**விருட்சிகம்**
உடல் நலத்தைப் பேணி சிரமத்தில் இருந்து மீளுவீர்கள். நீண்ட நாளாக தேடிக்கொண்டிருந்த முக்கியப் பொருள் கிடைக்கும். மற்றவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உங்களின் செல்வாக்குகூடும்.

**தனுசு**
பண விவகாரங்களில் இருந்து வந்த பிரச்னைகள் தீரும். பிறருக்கு உதவி செய்து உயர்வீர்கள். பணியிடத்தில் உங்கள் கை ஓங்கும். கவனம் சிதறாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**மகரம்**
பணியில் அதிக கவனம் தேவைப்படும். அமைதியான நாள். மனதுக்குப் பிடித்தவரை பல காலம் கழித்துச் சந்திப்பீர்கள். யாருக்கும் மத்யஸ்தம் செய்வதற்காக முயல வேண்டாம்.

**கும்பம்**
உடல் ஆரோக்கியம் சிறக்கும். மனதை அரித்த கவலை நீங்கும். இரகசியங்களைக் கையாளுவதில் கவனம் தேவை. கலகலப்பான நாள். எதையும் ஒருமுறைக்குப் பலமுறை முயன்றே முடிப்பீர்கள்.

**மீனம்**
பணியில் உடனிருப்பவர்களுடன் கவனமாகப் பழகுவது நல்லது. நீங்கள் மதிக்கும் பிரபலத்தின் சந்திப்பு மகிழ்ச்சியை உண்டாக்கும். ஆரோக்கியம் பற்றிய கற்பனை பயம் நீங்கி நிம்மதி பிறக்கும்.

# நமக்கான ஒரு காலம் நிச்சயமாக வரும் தொண்டர்கள் துவண்டு விடக்கூடாது!

### தேர்தல் முடிவுகளையடுத்து விஜயகாந்த் அறிக்கை

சென்னை, ஒக். 16

தமிழகத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், நமக்கான காலம் நிச்சயம் வரும் என்று கட்சியினருக்கு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் ஆறுதல் தெரிவித்துள்ளார்.

சட்டமன்றத் தேர்தலைத் தொடர்ந்து உள்ளாட்சித் தேர்தலிலும் தே.மு.தி.க. படுதோல்வி அடைந்துள்ளது. முரசு சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர்கள் ஒரு சில இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்நிலையில், தொண்டர்களுக்கு விஜயகாந்த் எழுதிய அறிக்கையில், “9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்



பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் திருப்பத்தூர் மாவட்டம் நாட்றாம்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்டதும் பேரி 2வது வார்ட் ஒன்றிய கவுன்சிலர் பதவிக்கு முரசு சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற செல்வி பழனிக்கு எனது வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல் தே.மு.தி.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களுக்கும், சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தலில் வெற்றி தோல்வி என்பது சகஜம். அதிகார பலம், பண பலத்தை மீறி நாம் தேர்தல் களத்தில் நிற்கிறோம். உண்மை, நேர்மை, உழைப்பை மட்டுமே நம்பி நாம் தேர்தலை எதிர்கொண்டோம். நமக்கான காலம் நிச்சயம் வரும். அதுவரை கழக தொண்டர்கள் துவண்டு விடாமல் வெற்றியை நோக்கி அயராது பாடுபட வேண்டும்” என்று கூறியுள்ளார்.

# சகல நாட்களிலும் கோயில்கள் திறப்பு சுகாதார வழிகாட்டல்கள் நடைமுறை

### இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு

சென்னை, ஒக். 16,

தமிழகத்தில் கோயில்கள் அனைத்தும் நேற்று முதல் சகல நாட்களிலும் திறக்கப்பட்டுள்ள அதேவேளையில், மத்திய அரசின் வழிகாட்டுதல்படி முகக்கவசம், கிருமி நாசினி, சமூக இடைவெளி குறித்து அறிவுறுத்தல் வழங்கப்படும என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் தற்போது தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு அமுலில் உள்ளது. தொற்று பாதிப்பு தொடர்ந்து குறைந்து வந்தாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சில கட்டுப்பாடுகளை தமிழக அரசு விதித்து வந்தது.

அதனால், வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்



வழிபாட்டு தலங்களை திறப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் மேலும் சில தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கை தமிழக அரசு நேற்று அறிவித்தது. அதன்படி தமிழகத்தில் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் வழிபாட்டு தலங்களை திறக்க அரசு அனுமதி அளித்திருந்தது.

இந்த நிலையில், அனைத்து நாட்களிலும் கோயில்கள் வழிபாட்டிற்கு திறக்கப்படும் எனும் அறிவிப்பை நேற்று தமிழக அரசு வெளியிட்டது. இதனை எந்த ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு கிடைத்த வெற்றியாக பார்க்க முடியாது என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு தெரிவித்துள்ளார். செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர்,

“முதலமைச்சர் வழிகாட்டுதல்படி நேற்று முதல் அனைத்து நாட்களிலும் கோயில்களில் வழிபட அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். அதேவேளையில், முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். மத்திய அரசின் வழிகாட்டுதல்படி தேவையான முகக்கவசம், கிருமி நாசினி, சமூக இடைவெளி குறித்து அறிவுறுத்தல் வழங்கப்படும். அதேநேரம், அர்ச்சனை, பூ, மாலை பழம் வைத்து பக்தர்கள் பூஜை செய்ய அனுமதி கிடையாது” என்றார்.

# அ.தி.மு.க. தலைமை அலுவலகத்துக்கு ‘எம்.ஜி.ஆர். மாளிகை’ என பெயர் சூட்டல்


### ஓ.பி.எஸ். - ஈ.பி.எஸ். கூட்டாக நேற்று அறிவிப்பு

சென்னை, ஒக். 16,

சென்னையிலுள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்திற்கு எம்.ஜி.ஆர். மாளிகை எனப் பெயர் சூட்டப்படும் என்று கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பி.எஸ். மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் ஈ.பி.எஸ். இருவரும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

அ.தி.மு.க. பொன்விழாவை முன்னிட்டு ஓ.பி.எஸ். - ஈ.பி.எஸ். ஆகிய இருவரும் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் விபரம்:

“அ.தி.மு.க. பொன்விழாவைக் கொண்டாட அ.தி.மு.க. உடன்பிறப்புகளும், கட்சியின் மீது பேரன்பு கொண்டவர்களும் ஆவலுடன் காத்திருக்கும் இவ்வேளையில், பொன்விழா கொண்டாட்டச் செயல்பாடு



கள் குறித்து ஆலோசிக்க, தலைமை நிர்வாகிகள் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது.

மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனங்களை விட்டு அகலாத புகழ் கொண்ட நிகரில்லா வள்ளல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். 1972ஆம் ஆண்டு ஒக்ரோபர் 17ஆம் நாள் “அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்” என்ற மகத்தான இயக்கத்தைத் தொடங்கிய போது ஏற்பட்ட அரசியல் எழுச்சியும், புத்துணர்ச்சியும் இன்றும் தொடர்வது எல்லையில்லா மகிழ்ச்சி அளிக்கிறது.

நேற்றும், இன்றும், நாளையும் தமிழ்நாட்டின் அசைக்க முடியாத அரசியல் சக்தியும், மக்கள் தொண்டாற்றுவதில் நிகரில்லாததும், அ.தி.மு.க. மட்டுமே என்பதை வரலாறு எடுத்துரைத்துக் கொண்டே இருக்கிறது.

அந்த வகையில், அ.தி.மு.க. தலைமைக் கழகத்திற்கு ‘புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகை’ என பெயர் சூட்டப்படவுள்ளது.

அரசியல் இயக்கத்தைத் தொடங்கிவிட்டு மக்கள் செல்வாக்கைத் தேடும் அரசியல் கட்சிகளுக்கு மாறாக, மக்கள் திரண்டு ஓர் அரசியல் இயக்கத்தைத் தொடங்குவதற்கு உத்வேகம் கொடுத்த இயக்கம் என்றால், அது புரட்சித் தலைவரால் தோற்றுவிக்கப்பட்ட அ.தி.மு.க.வையே சாரும்”.





## நல்லூர் கந்தன் ஆலயத்தில் நேற்று மானம்பூ உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக். 16

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் -மானம்பூ உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்றது.

உற்சவம் காலை 6.45 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் திருவிழா ஆரம்பமானது.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நல்லூரின் பண்டைய காலத்தில் உபயோகிக்கப்பட்ட பழைமையான சிறிய குதிரை வாகனத்தில் முருகப்பெருமான் எழுந்தருளி அமைதியான முறையில் மானம்பூ உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது.

(அ)

## கிளிநொச்சி டிப்போ சந்தியில் டிப்பர் குடைசாய்ந்து விபத்து!

கிளிநொச்சி, ஒக். 16

கிளிநொச்சி டிப்போ சந்தியில் டிப்பர் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்து நேற்று காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

வவுனியா திசையிலிருந்து ஏ-9 வீதி ஊடாக கிளிநொச்சி நோக்கி பயணித்த டிப்பர் வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

ஏ-9 வீதியில் கிரவல் ஏற்றி பயணித்த இந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் மறுபக்கத்துக்கு சென்று விபத்துக்குள்ளாகியது. விபத்து சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கவில்லை.

# கொரோனா கட்டுப்பாட்டில் வெற்றி அடைந்துள்ளோம்!

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.16

**நாட்டில் கொரோனா தொற்று நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கை வெற்றிகரமான நிலையை அடைந்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

இதற்கு சர்வதேச அளவிலும் சிறந்த ஆதரவு கிடைத்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

யுனிசெவ் பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக்குடன் சுகாதார அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனை தெரிவித்தார்.

உலகளாவிய கொரோனா தொற்றுநோய் சூழ்நிலையில், சில வளர்ந்த நாடுகள் சிரேஷ்ட குடிமக்களுக்கு சிகிச்சை அளிக்க மறுத்துவிட்ட நிலையில் இந்த நாட்டு சிரேஷ்ட குடிமக்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதாக அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

## அந்நிய செலாவணி இருப்பு நிலை குறித்து எவரும் கவலை கொள்ள தேவையில்லை

### கூறுகிறார் அஜித் நிவாட் கப்ரால்



கொழும்பு, ஒக். 16

அந்நிய செலாவணி இருப்பு நிலை தொடர்பில் முன்னெடுக்கப்படும் தவறான கருத்துக்களால் தேவையற்ற கவலை கொள்ளத் தேவையில்லை என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நெருக்கடியான இந்த காலப் பகுதியில் இது கவலைக்குரிதாக இருந்த போதிலும் மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நிதி நடவடிக்கையின் மூலம் அந்நிய செலாவணி இருப்பில் முன்னேற்றம் ஏற்படும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை மத்திய வங்கியில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜூலை மாதத்தில் 982 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டட மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்து ஓகஸ்ட் மாதத்தில் 400 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைவடைந்தது.

நாட்டின் வரலாற்றில் 15 முறை இவ்வாறான மறைப் பெறுமதியை காண்பித்த பல சந்தர்ப்பங்கள் உண்டு. எனி னும், அது தற்காலிகமானது. கொடுக்கல் வாங்கல் மூலம் இதன் பெறுமதி மாற்றமடையலாம். அந்த நிதி கொடுக்கல் வாங்கலை அடுத்த வாரம் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

தற்போது மொத்த வெளிநாட்டுள செலவாணி இருப்பு 4.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். சீன மக்கள் வங்கியின் பேரம் பேசி மாற்றிக் கொள்ளப்பட்ட வசதியிலான 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் இது உள்ளடக்கியதாகும்- என்றார்.

## உள்ளூர் பால்மாக்களின் விலைகளும் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 16

உள்ளூர் பால்மாக்களின் விலைகளையும் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மில்க்ரோ நிறுவனம் 400 கிராம் பால்மா பொதியின் விலையை, 470 ரூபாய் வரையில் அதிகரிக்க அவதானம் செலுத்தியுள்ளது.

எனினும், இது தொடர்பில், இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட வில்லையென நிறுவனத்தின் தலைவர் லசந்த விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேநேரம், பெல்வத்த நிறுவனம் பால்மாவின் விலையை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

380 ரூபாயாக இருந்த குறித்த நிறுவனத்தின் 400 கிராம் பால்மா பொதியின் விலை, தற்போது 460 ரூபாயென விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

டொலர் தொடர்பான பிரச்னைக்கு மத்தியில் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பால்மா பொதியின் விலையை 250 ரூபாயினால் அதிகரிக்க கடந்த 9ஆம் திகதி பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்களுடன் மோதினால் அது உங்களுக்கே ஆபத்தானது

### எஸ். பிக்கு ஸ்டாலின் பதிலடி



கொழும்பு, ஒக். 16

"ஆசிரியர் சமூகத்துடன் மோத வரவேண்டாம். அவ்வாறு மோதினால் அது உங்களுக்கே ஆபத்தாக அமையும்." - இவ்வாறு ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்கவுக்கு பதிலடி கொடுத்துள்ளது இலங்கை ஆசிரியர் சங்கம்.

"அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்தை எவ்வாறு நிறைவுக்கு கொண்டுவரவேண்டும் என்பது எனக்கு தெரியும். அவர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டத்தை ஒடுக்கி - தோற்கடித்து, பாடசாலைகளை மீள திறக்க வேண்டும்." என்று எஸ்.பி. திஸநாயக்க அறிவிப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியவை வருமாறு:

எஸ்.பி. திஸநாயக்கவுக்கு எதுவும் முடியாது என்பதால் தான் இம்முறை அமைச்சு பதவிகூட வழங்கப்படவில்லை. அவர் வாய்ச்சொல்லில் மட்டுமே வீரர். உளறுபவர். அந்த வாயால்தான் சிறைதண்டனைக் கூட அனுபவித்தார். தனக்கு எதாவது பதவியை பெற்றுக் கொள்ளவே இவ்வாறெல்லாம் அறிவிப்பு விடுத்து வருகின்றார்.

தனக்கு நேர்ந்த நிலை என்னவென்பதை கண்ணாடி முன்னால் நின்று அவர் பார்க்க வேண்டும். ஏற்கனவே நொந்து போயுள்ள அவரை, ஆசிரியர்களுடன் மோத வர வேண்டாம் என கூறிவைக்க விரும்புகின்றேன். அது அவருக்கே ஆபத்தாக அமையும்.

அதேவேளை, எமது பிரச்னைக்கு 21 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு வேண்டும். அது வரை போராட்டம் தொடரும். உரிய தீர்வு இல்லையேல் அடுத்தகட்டம் என்னவென்பதை விரைவில் அறிவிப்போம் -என்றார்.

## மண்ணெண்ணெய் அடுப்பின் விலை I500 முதல் 3000 ரூபாய் வரை அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 16

நாட்டின் பிரதான நகரங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் மண்ணெண்ணெய் அடுப்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் மண்ணெண்ணெய் அடுப்பின் விலை 1500 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்ததையடுத்து, மண்ணெண்ணெய் அடுப்பைப் பொதுமக்கள் அதிகளவில் கொள்வனவு செய்கின்றமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

புறக்கோட்டை வர்த்தக நிலையங்களில் பொதுமக்கள் அதிகளவில் மண்ணெண்ணெய் அடுப்பைக் கொள்வனவு செய்வதாக புறக்கோட்டை ஐக்கிய தேசிய சுயதொழில் சந்தை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் பிரதீப் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தற்போது புறக்கோட்டை வர்த்தக சந்தையில் மண்ணெண்ணெய் அடுப்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

# 401 தோட்டாக்களுடன் ஒருவர் முல்லைத்தீவில் கைதாகினார்

முல்லைத்தீவு, ஒக். 16

ரி-56 ரக துப்பாக்கிக்குரிய 401 தோட்டாக்களைத் தம் வசம் வைத்திருந்த ஒருவரை கைது செய்துள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

புதுமாத்தளன் பகுதியில் உள்ள வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தோட்டாக்களே மீட்கப்பட்டன.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக முல்லைத்தீவு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையின்போது சந்தேகநபரின் வீட்டிலிருந்து தோட்டாக்கள், மூன்று கிராம் கேரளக் கஞ்சா என்பன மீட்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர் நீண்ட காலமாகப் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடந்த போரின்போது விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட தோட்டாக்களே இவை என சந்தேகிக்கப்படுவதாகவும், அவற்றை மறைத்து வைத்திருந்த நோக்கம் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மாகாண சபை முறைமை இந்தியாவின் குழந்தையே!

## விமல் வீரவன்ச கூறுகிறார்



**கொழும்பு, ஒக். 16**

**“மாகாண சபை முறைமை என்பது இந்தியாவின் குழந்தையாகும். எனவே, அக்குழந்தை உயிருடன் இருக்கவேண்டும் என்பதையே அந்நாடு விரும்புகின்றது. அதனால்தான் தேர்தல் நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.” - என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறியவை வருமாறு-

மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியா விசேடமாக அழுத்தம் எதனையும் பிரயோகிக்கவில்லை. வழமை போல கோரிக்கை மட்டுமே விடுக்கப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்று முழுமையாக நீங்கவில்லை. நாட்டு மக்கள் நிவாரணத்துக்காக காத்திருக்கின்றனர்.

எனவே, தற்போதைய சூழ்நிலையில் மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுப்பது அவசியமா அல்லது தேர்தல் முக்கியமா என சிந்தித்து பார்க்க வேண்டும். மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களுக்கு முன்னுரிமை - முதலிடம் வழங்கப்படவேண்டும்-என்றார்.

# கிளிநொச்சி கோரக்கன்கட்டு பகுதியில் இராணுவ பொருள்கள் கண்டுபிடிப்பு

கிளிநொச்சி, ஒக். 16

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோரக்கன்கட்டு பகுதியில் இராணுவப் பயன்பாட்டுப் பொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த மழை காரணமாக புதைந்திருந்த அந்தப் பொருள்கள் வெளியில் தெரிய ஆரம்பித்துள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் அவதானித்த பிரதேசவாசிகள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். அந்தப் பொருள்கள் இராணுவ உபயோகப் பொருள்கள் எனவும், அதில் 7 கண்ணிவெடிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.





# உரம் பெற்று தருமாறு கோரி நேற்று கிளிநொச்சி விவசாயிகள் போராட்டம்

கிளிநொச்சி, ஒக். 16

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள விவசாயச் செய்கைக்கு தேவையான உரத்தை பெற்றுத் தருமாறு கோரி நேற்று கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை முன்பாக இருந்து மாவட்ட செயலகம் வரை சென்ற பேரணி, மாவட்ட செயலகத்தில் நிறைவடைந்தது.

அங்கு ஜனாதிபதி, விவசாய அமைச்சர், மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கான மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்த மகஜர்களை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் பெற்றுக் கொண்டார்.

(அ)

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய மேலும் 72 பேர் சிக்கினர்

கொழும்பு, ஒக். 16

நாட்டில் நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியிலேயே இந்த 72 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2020 ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இதுவரை 80 ஆயிரத்து 862 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(அ)

# போலி சாரதி அனுமதிப்பத்திரம் தயாரித்த மூன்று பேர் சிக்கினர்

கொழும்பு, ஒக். 16

போலி சாரதி அனுமதிப்பத்திரம் தயாரித்த குற்றச்சாட்டில் இரத்தினபுரி - வேவெல்வத்த, படேபொல பகுதியில் வைத்து மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போலி ஆவணங்கள் தயாரிக்க உதவிய நபர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டனர்.

அதே பகுதியில் வசிக்கும் 34, 42 மற்றும் 44 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக இரத்தினபுரி சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

(அ)



# இந்திய இராணுவ பிரதானி திருகோணமலைக்கு விஜயம்

திருமலை, ஒக். 16

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய இராணுவத்தின் பிரதானி ஜெனரல் மனோஜ் முகுந்த் நராவனே நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

திருகோணமலை 4ஆம் கட்டைச் சந்தியில் 1987களில் இந்திய இராணுவத்தின் முகாம் அமைந்திருந்த இடத்தை அவர் பார்வையிட்டார்.

இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த காலப்பகுதியில் அந்த இராணுவ முகாமில் அவர் வசித்தார் எனவும் அப்போது இந்திய இராணுவத்தின் லெப்டினனாக அவர் கடமையாற்றி இருந்தார் என்றும் இராணுவ வட்டாரங்களில் இருந்து அறிய முடிந்தது.

மேலும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரின் வாசஸ்தலம் அமையப்பெற்ற இடத்திலும் அந்தக் காலப்பகுதியில் இந்திய இராணுவ முகாம் அமைந்திருந்ததுடன் அதனையும் அவர் பார்வையிட்டு தனது ஞாபகங்களை மீட்டுக்கொண்டார்.

# கொரோனா கட்டுப்பாடு தளர்த்தப்பட்டாலும் சுகாதார ஆலோசனையை பின்பற்றுங்கள்

## இராணுவ தளபதி மக்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 16

நாட்டில் நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் சுகாதார விதிமுறைகளை கடைபிடிக்குமாறு பொதுமக்களுக்கு இராணுவ தளபதி, ஜெனரல் சவேந்திர சில்வா அறிவுறுத்தியுள்ளார்.

மித்ரா சக்தி இராணுவப் பயிற்சியை அவதானித்த பின்னர் இராணுவ தளபதி நேற்று ஊடகங்களுக்கு இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனா வைரஸ் தொற்றுநோயை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்திய நாடுகளிலும் நோய்த்தொற்றுகள் மீளவும் அதிகரித்திருக்கின்றது.

எனவே பொதுமக்கள் புத்திசாலித்தனமாக சிந்திக்கவும் செயல்படவும் வலியுறுத்துகின்றோம்.

முகக்கவசம் அணிதல், சமூக



இடைவெளி மற்றும் பிற சுகாதார விதிமுறைகளை பின்பற்றுமாறு பொது மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்- என்றார்.







# அப்துல் கலாமின் பிறந்த தினம் நேற்று யாழ்.பொது நூலகத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மறைந்த முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் 90ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று யாழ்.பொது நூலகத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

யாழ். பொது நூலகத்தின் பிரதம நூலகர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.இந்திய துணைத்தூதுவர்,யாழ் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டு அப்துல் கலாமின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

கொரோனா இடர்நிலை காரணமாக மட்டுப்படுத்தப்பட்டோரின் பங்குபற்றுதலுடன் சுகாதார நடைமுறையை பின்பற்றி இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.பொது நூலக ஊழியர்கள், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர். (அ-03)

# எமது உரிமை கோரிக்கையை வெல்ல பாரத தேசம் துணை நிற்கவேண்டும்!

## யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஒக். 16

**"எமது உரிமை கோரிக்கையை வெல்வதற்கு பாரத தேசம் எமக்கு துணை நிற்கவேண்டும். எமது தந்தை நாடு என்ற அடிப்படையில் அது நமக்கு துணை நிற்கவேண்டும் என்ற கோரிக்கையை நான் விடுகின்றேன்."**

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன்.

யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற அப்துல் கலாமின் 90ஆவது பிறந்த நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒருபோதும் பாரத தேசத்தின் நலன்களுக்கு முரணாக நாங்கள் செயற்படப் போவதில்லை. நாங்கள் பாரத தேசத்தின் உறவுகளாக, தொப்புள் கொடி உறவுகளாக, அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, அவர்களின் பொருளாதாரத்தை - அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தகூடிய ஒரு தரப்பாக இந்த தேசத்தில் இருப்போம்.

எம்மைப் பொறுத்தவரை பாரத தேசம் என்பது எமது தந்தையர் நாடு. நாம் தந்தையர் நாடான பாரத தேசத்தை பின்பற்றி செயல்படுகின்றோம்.

தென்னிந்தியா என்பது எமது தொப்புள் கொடி உறவுகள் வாழ்கின்ற இடமாகும். ஆகவே பண்பாட்டு ரீதியாகவும் பாரத தேசத்தை நாங்கள் பின்பற்றுகிறோம். எங்கள் அரசியல் கலாசாரத்திலும் பாரத தேசத்தின் அரசியல் கலாசாரத்தை பின்பற்றுகின்றோம்.

பாரத தேசத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பின்பற்றுகின்றவர்களை நினைவு கூருவதை போல இங்கேயும் நாம் அவர்களை நினைவுகூரும் பண்பாட்டை பின்பற்றி வருகின்றோம்.

குறிப்பாக இன்றைய விஜயதசமி நாளில் அப்துல் கலாமின் நினைவு தினத்தில் பாரத தேசத்துக்கு ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். எமது நீண்டகால உரிமை கோரிக்கைக்கு பாரத தேசம் செவி சாய்க்க வேண்டும்.

நாம் தென்னிலங்கையில் இருக்கும் சிங்கள மக்களுக்கும் எதிரானவர்களல்லர். நாங்கள் மற்றைய இனத்தை அழிப்பதற்காக எமது உரிமையை கோரவில்லை. நாங்கள் எம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக - எம்மை வளர்த்துக் கொள்ள - எமக்கு உரிமை வேண்டும் என கடந்த 60 வருடங்களாகப் போராடி வருகின்றோம்.

அந்த வகையில் பாரத தேசம் எமது கோரிக்கையை நியாயமாக புரிந்து எமது கோரிக்கைகளை அடைவதற்கு அழுத்தங்களையும் ஒத்துழைப்புகளையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

# பிரான்ஸிலிருந்து இலங்கைக்கு நவம்பர் முதல் விமான சேவை

கொழும்பு, ஒக். 16

உலகின் முதல்நிலை விமான சேவையாக கருதப்படும் எயார் பிரான்ஸ் விமான சேவை நிறுவனம் எதிர்வரும் 05ஆம் திகதியிலிருந்து இலங்கைக்கான வணிக விமான சேவையை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் ஒரு வாரத்துக்கு 03 நேரடி விமான சேவைகளை முன்னெடுக்க அந்த நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பிரான்ஸ் பாரிஸ் நகரில் தற்போது இடம்பெற்றுவரும் சர்வதேச சுற்றுலா சந்தைக் கண்காட்சியில் கலந்துகொண்டுள்ள சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் எயார் பிரான்ஸ் விமான சேவை நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்குமிடையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (அ)



விஜயதசமி தினமான நேற்று காலை நல்லை ஆதீனத்தில் ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெற்றது. 50இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மூலம் வித்தியாரம்பம் செய்யப் பெற்றனர்.

# கொரோனாவுக்கு 24 வயது யுவதி பலி!

வவுனியா, ஒக். 16

வவுனியா - நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையில் உயிரிழந்த 24 வயது யுவதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்துக்கு நெடுங்கேணி பிரதேச வைத்திய சாலை வெளி நோயாளர் பிரிவு ஊடாக பெறப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட உயிரிழந்த பெண்ணின் மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

அதன் பி. சி. ஆர். பரிசோதனைமுடிவிலேயே பெண்ணுக்கு தொற்று இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. ஆர். றஜீவனா (வயது-24) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடந்த 10 ஆண்டுகளில் 27,000 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழப்பு!



கொழும்பு, ஒக். 16

இலங்கையில் கடந்த 10 ஆண்டுகளில் 27,000 பேர் வீதி விபத்துகளில் உயிரிழந்தனர் என பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் 30 ஆண்டுகால போரை விட அதிகமான மக்கள் இறந்தனர் என அவர் தெரிவித்தார்.

அவர் கருத்து வெளியிடுகையில்-

கடந்த 10 ஆண்டுகளில் 27,000 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர். இந்நாட்டு மக்களின் மஞ்சள் கோட்டில் மற்றும் பெருந் தெருக்களில் 27,000 பேர் உயிரிழந்தனர். 30 வருடப் போரில் கூட 29,000 பேர் மட்டுமே உயிரிழந்தனர்.

இவ்வருடம் ஜனவரி முதல் இதுவரை 1,760 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்தனர். போக்குவரத்து விதிமீறல்கள், குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் மற்றும் அதிவேகம் காரணமாக இந்த உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன.

போதைப்பொருளை பயன்படுத்துபவர்கள்தான் அதிக வேகத்தில் வாகனங்களை செலுத்துகின்றனர். அதனை பரிசோதிக்க எந்த உபகரணமும் இல்லை. அந்த உபகரணங்களை விரைவில் கொண்டு வருவோம். அவை சட்டபூர்வமானவுடன், எமக்கு கைது செய்ய முடியும் - என்றார்.

# மாகாண பயண தடையை இறுக்கமாக பின்பற்ற உத்தரவு



கொழும்பு, ஒக். 16

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை எதிர்வரும் 21ஆம் திகதிவரை நீடிக்கப்படுவதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 19 ஆம், 20ஆம் திகதிகள் அரச விடுமுறை தினங்கள் என்பதன் காரணமாக மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்து நடவடிக்கைகளின்போது கடுமையான சோதனைகளை முன்னெடுக்குமாறும் பொலிஸாருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் நிகழ்நிலை காணொளி ஊடாக இடம்பெற்ற கோவிட் செயலணிக் கூட்டத்தின்போதே ஜனாதிபதி இவ்வாறான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குளத்தில் மூழ்கி இரு சிறுவர்கள் மரணம்!

மொனராகலை, ஒக். 16

மொனராகலை, தம்பகல்ல, உடுமுல்ல பகுதியில் குளத்தில் மூழ்கி 2 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவர்கள் இருவரும் குளத்தில் மூழ்கிய நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துள்ளனர்.

மரணித்த இருவரும் 14 வயதுடையவர்கள் என்றும், கொல்லாதெனிய - தம்பகல்ல பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (இ)

# வடக்கில் ஊடுருவும் இந்திய மீனவர் அரசியலாகியுள்ள மீனவர் பிரச்னை

■ பி.பார்த்தீபன்

வடக்கு கடற்பகுதி மீண்டும் கொதி நிலையில் காணப்படுகின்றது. கடந்த ஒரு வார காலப் பகுதியில் இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான ஊடுருவல் வடக்கு மீனவர்களை அச்சமடையச் செய்திருக்கின்றது. இந்த ஊடுருவலைத் தடுப்பதற்கு அரச தரப்பு எதனையும் செய்யாமல் இருந்தது அவர்களுக்குக் கடும் சீற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இதற்கு எதிராக நாளை போராட்டங்களை நடத்தப்போவதாகவும் மீனவர் அமைப்புக்கள் அறிவித்துள்ளன. இந்தப் பின்னணியில்தான் ஊடுருவிய 23 இந்திய மீனவர்கள் புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

மூன்று தசாப்த காலமாகத் தொடர்ந்த போரினால் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்ட தரப்பாக இருப்பவர்கள் வடபகுதி மீனவர்கள்தான். குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் பகுதி மீனவர்கள் போரின் போது தமது வாழ்வாதாரத்தை முற்றாகவே இழந்திருந்தார்கள். போருக்குப் பின்னர் தமது வாழ்வை மீளக்கட்டியெழுப்பும் முயற்சியில் பல தடைகளை அவர்கள் எதிர்கொள்ளன வேண்டியிருந்தது. அவர்கள் தமது வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு உதவவேண்டிய அரசாங்கம் அதனைச் செய்யவில்லை. பதிலாக மறைமுகமான தடைகளைத்தான் போட்டது.

**தென்பகுதி மீனவர்களின் தொடரும் ஆக்கிரமிப்பு**

குறிப்பாக, தென்பகுதியிலிருந்து சட்டவிரோதமாக வந்து வாடி அமைத்து - கடற்படையினரின் பாதுகாப்புடன் தொழில் செய்யும் சிங்கள மீனவர்களின் ஆக்கிரமிப்பு அவர்கள் எதிர்கொள்ளும் முதலாவது பிரச்னை. அரசாங்கத்தின் மறைமுகமான ஆதரவுடனேயே இவை இடம்பெறுவதால், அதற்கு எதிராக வடக்கு மீனவர்களால் எதுவும் செய்ய முடிவதில்லை. தமிழ்க் கட்சிகளும் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிடுவதற்கு மேலாக எதனையும் செய்யக் கூடியவையாக இல்லை. அதனால், குறிப்பிட்ட 'சீசனில்' தென்பகுதி மீனவர்களின் ஆக்கிரமிப்பு கிரமமாகத் தொடர்கின்றது.

மீன்பிடிப்பதில் சிங்கள மீனவர்கள் கையாளும் இரண்டு நுட்பங்கள் வடக்கின் மீள்வளத்தையே அழிப்பதாக இருக்கின்றது. ஒன்று - அதிக ஒளி பாய்ச்சி மீன் பிடிப்பது. இரண்டு வெடி வைத்து மீன்பிடிப்பது. இந்த இரண்டும் சட்ட ரீதியாக தடை செய்யப்பட்டுள்ள போதிலும், சிங்கள மீனவர்கள் உடனடியாக அதிக மீன்களைப் பிடிப்பதற்காக இந்த சட்டவிரோத நடைமுறைகளைக் கையாள்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டு வடக்கு மீனவர்களால் முன்வைக்கப்படுகின்றது. இதனால், இலட்சக்கணக்கான மீன்குஞ்சுகள் இறக்கின்றன என முல்லைத்தீவு மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

**"கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்படைக்கு உத்தரவிட்டால், ஊடுருவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கடற்படையினர் எடுத்திருக்க வேண்டும்" என மீனவர் அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. ஆனால், மௌனமாக இருந்த டக்ளஸ் தேவானந்தா, "ஊடுருவும் இந்திய மீனவர்களைப் பிடித்துக்கொண்டு வாருங்கள்" என வடபகுதி மீனவர்களிடம் இப்போது கூறியிருக்கின்றார்.**

சிங்கள மீனவர்களின் ஆக்கிரமிப்பு ஒருபுறம் இருக்க, இந்திய மீனவர்களின் ஊடுருவல் -ஆக்கிரமிப்பு என்பனதான் இப்போது வடக்கு மீனவர்களுக்குப் பெரும் சவாலாகியிருக்கின்றது. இதனை எதிர்க்கும் வடபகுதி மீனவர்கள் தாக்கப்படுகின்றார்கள். சில தினங்களுக்கு முன்னர் பருத்தித்துறையில் ஊடுருவிய இந்திய மீனவர்களால் வடபகுதி மீனவர்கள் மூவர் கடுமையாகத் தாக்கப்பட்டு காயமடைந்திருந்தார்கள். இதுபோன்ற சம்பவங்கள் முல்லைத்தீவிலும் இடம்பெற்றிருக்கின்றது.

**2 இலட்சம் மக்களின் வாழ்வாதார தொழில்**

வடக்கு மாகாணத்தில் சுமார் 2 இலட்சம் மீனவர்கள், மீன்பிடிப்பு தொழிலை மட்டுமே நம்பி உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் கொடூரமான போரில் தங்கள் குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்கள், வீடுகளை இழந்தவர்கள், உடைமைகளை இழந்தவர்கள். தற்போது தங்கள் வாழ்க்கையை மீட்டெடுக்க கடுமையாகப் போராடி கொண்டிருக்கின்றனர். போதியளவுக்கு அரசாங்கத்தின் உதவிகள் கிடைக்காத நிலையில், தமது சுயமுயற்சியால், மீண்டும் கடலுக்குள் இறங்கிய இவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளில் இந்திய ஊடுருவல் பிரதானமானது.

இந்திய மீனவர்கள் குறிப்பாக தமிழக மீனவர்கள் சக்திவாய்ந்த பெரிய இயந்திர படகுகள், பெரிய வலைகளுடன் மீன் பிடிக்க வருகின்றனர். அவர்களுடன் வடபகுதி மீனவர்களால் போட்டி போட முடிவதில்லை. வடக்கு மீனவர்கள் பாரம்பரிய முறையில் சிறிய படகுகள், சிறிய வலைகளை பயன்படுத்தி மீன்பிடிக்கின்றனர் எனக் குறிப்பிடுகின்றார் வடக்கு மீன்டி அமைப்பு ஒன்றின் பிரதிநிதி.



இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன் பிடிப்பது சுற்றுச்சூழலுக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. காரணம் அவர்கள் இழுவலை மடியை பயன்படுத்துவதால் கடலடியில் உள்ள உயிரினங்கள் அழிகின்றன. குறிப்பாக பவள பாறைகள், உயிரினங்களின் முட்டைகள் அழிக்கப்படுகின்றன. மீன்களின் இனப்பெருக்கத்தை இது பெருமளவுக்குப் பாதிக்கின்றது. இதனால் பாக்குநீரிணையில் நீர்வாழ் உயிரினங்களுக்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்படுகிறது என்பதை சுற்றுச்சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

**பேச்சுக்களில் முன்னேற்றமற்ற நிலை**

இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளும் கடந்த சில ஆண்டுகளாக பேச்சு மேசையில் முயற்சிகளை மேற்கொண்டன. ஆனால், சிறிதளவுதான் முன் னேற்றம் கிடைத்தது. இதற்கு காரணம் அரசியல். ஒருபக்கம் இந்திய மீனவர்கள் இலங்கை கடல் பகுதிக்குள் சட்டவிரோதமாக மீன் பிடிப்பதால், வடபகுதி மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். மறுபக்கம், இலங்கை கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டால் இந்தியாவில் கண்டனக் குரல் எழுப்புகின்றனர்.

அதே நேரத்தில் தனது கடல் பகுதிக்குள் அத்துமீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இலங்கை அரசுக்கு சட்டப்படி உரிமை உள்ளது. அதனால், ஊடுருவும் படகுகளை பறிமுதல் செய்வதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடக்கு மீனவர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

எனவே இந்த விஷயத்தில இரு நாடுகளும் தெளிவான முடிவெடுக்க வேண்டிய நிலை உள்ளது. அதேபோல் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், கடல்வளம், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் இலங்கை அரசும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதில்தான் ஆயிரக்கணக்கான இலங்கை தமிழர்களின் வாழ்வாதாரம் அடங்கி உள்ளது. இந்தியா, இலங்கை அரசுகள் மீனவர்களின் நலனுக்கு பயன்தரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நேரம் இதுதான்.

**மடிவலை தடை சட்டமும் கண்டுகொள்ளாத அரசும்**

தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த இவ்வாறான சம்பவங்களையடுத்து 2018 இல் மடிவலையைப் பயன்படுத்து தடை செய்யப்பட்டது. இதற்கான சட்ட மூலம் இலங்கைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் எல்லைதாண்டி வரும் இந்திய மீனவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், கடந்த ஒன்றரை வருட காலமாக இந்திய மீனவர்களுக்காக வடக்கு கடல் திறந்துவிடப்பட்ட ஒரு நிலை காணப்படுகின்றது. கொரோனா பரவல் இதற்கு ஒரு காரணமாகச் சொல்லப்பட்டது. இதனை தமக்குச் சாகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் இந்திய மீனவர்களின் ஊடுருவல் தொடர்வதை கடந்த வாரங்களில் அதிகளவுக்கு அவதானிக்க முடிகின்றது.

மடிவலையை தடைசெய்வதற்கான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு, வடபகுதிக் கடலில் பெருமளவு கடற்படையினரும் கடமையில் ஈடுபட்டுள்ள நிலையில், இவ்வாறு ஊடுருவல் தொடர்வது தமக்குப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துவதாக முல்லைத்தீவு மீனவர்கள் அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பாக வடபகுதி மீனவர்களையும், தென்னிந்திய மீனவர்களையும் மோத விடுவதற்கான உபாயமாக அரசாங்கம் இதனைப் பயன்படுத் துகின்றதா என அவர்கள் கேள்வி எழுப்பு கின்றார்கள்.

கடற்றொழில் அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயத்தில் கடற்படைக்கு உத்தரவிட்டால், ஊடுருவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கடற்படையினர் எடுத்திருக்க வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். ஆனால், இவ்விடயத்தில் மௌனமாக இருந்த டக்ளஸ் தேவானந்தா, "ஊடுருவும் இந்திய மீனவர்களைப் பிடித்துக்கொண்டு வாருங்கள்" என வடபகுதி மீனவர்களிடம் இப்போது கூறியிருக்கின்றார்.

**அமைச்சர் டக்ளஸின் கருத்தும் உண்மையும்**

அமைச்சர் தேவானந்தாவின் கையாலாகத் தனத்தைத்தான் இது வெளிப்படுத்துவதாக முல்லைத்தீவு மீனவர் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள். "ஆயுதங்களையும், அதிவேக ரோந்துப் படகுகளையும் வைத்துள்ள கடற்படையினர் செய்ய வேண்டிய வேலையை மீனவர்கள் செய்ய வேண்டும் என அவர் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?" எனவும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றார்கள். கடற்படைக்கு உத்தரவிட முடியாத கையாலாகாத நிலையில்தான் அமைச்சர் டக்ளஸ் இவ்வாறான கருத்தை முன்வைக்கின்றார் என்பது அவர்களுடைய குற்றச்சாட்டு. அதே வேளையில், தென்னிந்திய மீனவர்களுடன் வட பகுதி மீனவர்களை மோதவிடுவதாக அமைச்சரின் அறிவிப்பு உள்ளது என்பதும் அவர்களுடைய கருத்தாக உள்ளது.

கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு . போராட்டம் ஒன்றை முன்னெடுக்கப்போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அறிவித்துள்ள பின்னணியில் புதன்கிழமை இரவு வடபகுதியில் ஊடுருவிய 23 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது செய்யப்பட்டனர். சுமார் ஒன்றரை வருடங்களின் பின்னர் இப்போதுதான் முதல் தடவையாக ஊடுருவிய இந்திய மீனவர்கள் கைதாகியுள்ளனர். ஆனால், இது தற்போது உருவாகியிருக்கும் கொதி நிலையைத் தணிப்பதற்கா அல்லது, இது போன்ற நடவடிக்கைகள் தொடருமா?

தொடரும் இந்தப் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு காணப்படாத வரையில் வடக்கு மீனவர்களால் நிம்மதியான வாழ்க்கைக்குத் திரும்ப முடியாதிருக்கும் என்பதே உண்மை!

■




## பொருளியல் நோபல் பரிசு;

# பொருளியல் ஆய்வு முறைகளை முற்றாக மாற்றியமைத்த மூவர்!

■ செல்வ புவியரசன்

பொருளியலுக்கான நோபல் பரிசாகக் கருதப்படும் சுவீடன் மத்திய வங்கிப் பரிசினை இந்த ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த மூன்று பொருளியல் அறிஞர்கள் பகிர்ந்துகொண் டுள்ளனர்.

பரிசின் ஒரு பகுதியை கனடாவில் பிறந்து, தற்போது கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் பணியாற்றிவரும் டேவிட் கார்ட் (David Card) பெறுகிறார். மறுபகுதியை மாசசூசிட்ஸ் தொழில் நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஜோஷ்வா ஆங்கிரிஸ்ட் (Joshua Angrist), ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குய்டோ இம்பென்ஸ் (Guido Imbens) இருவரும் பகிர்ந்துகொண்டுள்ளனர். ஜோஷ்வா ஆங்கிரிஸ்ட் இஸ்ரேலைப் பூர்வீகமாகக் கொண்டவர். குய்டோ இம்பென்ஸ், நெதர்லாந்து நாட்டில் பிறந்தவர்.

மூவரும் பொருளியலின் ஆய்வுமுறைகளை முற்றிலுமாக மாற்றியமைத்திருக்கிறார்கள் என்று பாராட்டியிருக்கிறது சுவீடிஷ் அகாடமி.

### கூலி உயர்வின் விளைவுகள்

குறைந்தபட்சக் கூலி அதிகரித்தால் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். எனவே, தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியிருக்கும் புதிதாகக் குடியேறுபவர்களால் பூர்வீகக் குடிமக்களுக்கு வேலையிழப்பு ஏற்படும் என்பது போன்று காலம்காலமாகத் தொடர்ந்துவந்த நம்பிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்கி, அதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை என்று எடுத்துக்காட்டியவர் டேவிட் கார்ட்.

குறைந்தபட்சக் கூலி உயர்த்தப்பட்டதன் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு நியூ ஜெர்ஸியிலும் கிழக்கு பென்சில்வேனியாவிலும் உள்ள உணவகங்களை அவர் தனது ஆய்வுப்பொருளாக எடுத்துக்கொண்டார்.

நியூ ஜெர்ஸியில் குறைந்தபட்சக் கூலி உயர்ந்தது. பென்சில்வேனியாவில் அதே கூலி தொடர்ந்தது. ஆய்வின் முடிவில், குறைந்தபட்சக் கூலி உயர்த்தப்படுவதால் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்துவிடவில்லை என்பது நிரூபணமானது. தொழிலாளர்களின் ஊதிய உயர்வுக் கோரிக்கை, அவர்களின் வேலைவாய்ப்புக்கே பாதகமாக மாறும் என்ற முதலாளித்துவ அச்சுறுத்தல்களுக்கு அறிவியல்பூர்வமான விடையாக இந்த ஆய்வு அமைந்தது.

டேவிட் கார்ட்டுடன் இணைந்து இந்த ஆய்வுகளில் ஈடுபட்ட அலன் க்ரூகெர் (Alan Krueger) 2019இல் காலமாகிவிட்டார். க்ரூகெர் உயிருடன் இருந்திருந்தால், அவரும் இந்தப் பரிசினைப் பகிர்ந்துகொண்டிருந்திருப்பார். உழைப்புச் சந்தையில் நிலவும் இனவாதப் போக்கு, மருத்துவக் காப்பீடு, தொழிற்சங்கங்கள், அவற்றின் பேரம் பேசும் திறன் என்று டேவிட் கார்டின் ஆய்வுப் பரப்பு மிகவும் விரிவானது. எனினும், பொருளியலில் உழைப்பின் பங்களிப்புதான் அவரது ஆய்வுகளின் மையம்.

### பானர்ஜி-டுஃப்ளோ பாராட்டு

2019இல் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட அபிஜித் பானர்ஜிக்கும் அவரது இணையர் எஸ்தர் டுஃப்ளோவுக்கும் நோபல் பரிசு அளிக்கப்பட்டது. அதே ஆண்டில், வெளியான அவர்களது ‘குட் எகானமிக்ஸ் ஃபார் ஹார்ட் டைம்ஸ்’ புத்தகமும் பெருங்கவனம் பெற்றது. குடியேற்றம் குறித்தும் பூர்வீகக் குடிகளின் அச்சம் குறித்தும் அந்நூலில் விவாதித்த பானர்ஜியும் டுஃப்ளோவும் டேவிட் கார்ட் ஆய்வுகளைத்தான் மேற்கோள் காட்டியிருந்தனர்.

1980இல் கியூப அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோ, விரும்புபவர்கள் நாட்டை விட்டு வெளியேறலாம் என்று அறிவித்த வேகத்தில், அந்நாட்டிலிருந்து 1.25 இலட்சம் தொழிலாளர்கள் அமெரிக்காவின் மியாமி நகரத்துக்குக் குடியேறினார்கள். அந்நகரில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒரே ஆண்டில் 7% கூடியது. கியூப தொழிலாளர்களின் குடியேற்றத்துக்கு முன்பும் பின்பும் அந்நகரத்தில் கூலியின் விகிதமும் வேலைவாய்ப்பின் விகிதமும் எப்படி உயர்ந்தன என்பதை மற்ற நான்கு அமெரிக்க நகரங்களோடு ஒப்பிட்டு எடுத்துக்காட்டினார் டேவிட் கார்ட்.

தொழிலாளர்கள் புதிதாக வந்து குடியேறுவதால், பூர்விகக் குடிகளின் வேலைவாய்ப்பில் உடனடியாகவோ நீண்ட கால அளவிலோ எந்த மாற்றமும் வருவதில்லை என்பதை ஆய்வுகளின் வழியாக அவர் உறுதிப்படுத்தினார்.

> “வருமானத்துக்கும் கல்விக்கும் இடையிலான உறவு குறித்து, ஆலன் க்ருகெருடன் இணைந்து ஜோஷ்வா ஆங்கிரிஸ்ட் மேற்கொண்ட ஆய்வு இயல்புச் சோதனைகளின் அடிப்படையிலானது. பாடசாலைகளில் கூடுதல் கல்வியைப் பெற வாய்ப்புள்ளவர்கள், கூடுதல் ஊதியத்தைப் பெறும் தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்ற முடிவுக்கு அந்த ஆய்வு இட்டுச்சென்றது.

அந்த ஆய்வின் முக்கியத்துவத்தை பானர்ஜி இணையர் விதந்தோதிப் பாராட்டியிருப்பார்கள். கியூபாவிலிருந்து மியாமிக்குக் குடியேறியவர்கள், அங்கு கிடைக்கும் வேலைவாய்ப்புக்காக மட்டும் அந்நகரத்தைத் தேர்வு செய்யவில்லை. கியூபாவுக்கு வெகு அண்மையிலுள்ள நகரம் அதுதான். டேவிட் கார்ட் ஆய்வுகளின் அணுகுமுறை மட்டுமல்ல, எட்டப்பட்ட முடிவுகளும் மிகவும் முக்கியமானவை. தொழிலாளர்களின் குடியேற்றப் பிரச்சினைக்கு மரபான ‘அளிப்பு - தேவை’ விதியை அப்படியே பொருத்திப் பார்க்க முடியாது என்பதை முதலில் எடுத்துக்காட்டியது டேவிட் கார்ட் ஆய்வுகள்தான் என்கிறது ‘குட் எகானமிக்ஸ்’ புத்தகம்.

டேவிட் கார்ட் மேற்கொண்ட இத்தகைய பொருளியல் ஆய்வுகள், சமூகவியல் ஆய்வுகளாகவும் அமைந்துள்ளன. அவை, உழைக்கும் வர்க்கத்துக்குள்ளேயே பகைமை வளர்க்கும் வளர்ந்த நாடுகளின் தேர்தல் அரசியல் உத்திகளை மறுதலிக்கவும் செய்கின்றன.

### இயல்புச் சோதனைகள்

ஆங்கிரிஸ்ட், இம்பென்ஸ் இருவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ள பரிசானது காரண காரிய விளைவுகளின் அடிப்படையில் தெளிவான முடிவுகளைப் பெறும் வகையில், அவர்கள் உருவாக்கிய ஆய்வு முறைகளுக்கானது. இயல்புச் சோதனைகள் என்றழைக்கப்படும் இந்த ஆய்வுமுறை தற்போது நோபல் பரிசு பெற்றிருக்கும் பொருளியல் அறிஞர்களால் 90களில் வளர்த்தெடுக்கப்பட்டது. புதிதாகக் கண்டறியப்பட்ட ஒரு மருந்தின் விளைவுகளைச் சோதனைக்கூடத்தில் ஆராய்ந்து பார்ப்பதுபோல, பொருளியல் கொள்கைகளின் தாக்கங்களை மக்கள் சமூகத்தில் ஆராய்ந்து பார்க்கும் முறை இது.

வருமானத்துக்கும் கல்விக்கும் இடையிலான உறவு குறித்து, ஆலன் க்ரூகெருடன் இணைந்து ஜோஷ்வா ஆங்கிரிஸ்ட் மேற்கொண்ட ஆய்வு இயல்புச் சோதனைகளின் அடிப்படையிலானது. பாடசாலைகளில் கூடுதல் கல்வியைப் பெற வாய்ப்புள்ளவர்கள், கூடுதல் ஊதியத்தைப் பெறும் தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்ற முடிவுக்கு அந்த ஆய்வு இட்டுச்சென்றது. ஒரே ஆண்டில், தொடக்க மாதங்களில் பிறந்தவர்களுக்குக் கல்வியாண்டு உடனடியாக முடிந்துவிடுகிறது.

ஆண்டின் இறுதி மாதங்களில் பிறந்தவர்கள் அடுத்த கல்வியாண்டின் முடிவுவரைக்கும் கூடுதலாகப் படிக்கும் வாய்ப்பினைப் பெறுகிறார்கள் என்ற அளவுக்கு அமெரிக்காவின் ஆரம்பக் கல்வி முறைக்கும் உடலுழைப்புத் தொழிலாளர்களின் ஊதிய விகிதத்துக்கும் இடையிலான உறவைப் பேசியது அந்த ஆய்வு. அதன் முடிவுகளை மேம்படுத்துவதில் ஆங்கிரிஸ்ட், இம்பென்ஸ் இருவரும் இணைந்து பணியாற்றினர். இத்தகைய நம்பகமான ஆய்வுமுறைகளுக்கு இதற்கு முன் பொருளியல் துறையில் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இப்போதும்கூட, மாதிரி ஆய்வுகள் முழுமைக்கும் பொருந்துமா என்ற கேள்விகள் இல்லாமலில்லை.

‘மற்றவை மாறாதிருக்கும்போது’ என்று தொடங்கி எப்போதுமே தர்க்க ரீதியான ஊகங்களையே முடிவுகளாக முன்மொழிகிற பொருளியல் துறையில், அறிவியல் பூர்வமான ஆய்வுமுறைகள் ஒரு புதிய வெளிச்சத்தைக் கொண்டுவந்துள்ளன.
மூலதனத்துக்கான இலாபத்தையும் அதற்கான சந்தை அமைப்பையுமே பிரதான ஆய்வுப்பொருளாகக் கொண்டிருந்த நிலை மாறி, உழைப்பும் கூலியும்கூட இப்போது ஆய்வுப்பொருளாக மாறியிருக்கின்றன. அந்த ஆய்வுகளுக்குக் கிடைத்திருக்கும் பரிசு என்பது உழைக்கும் வர்க்கத்துக்கு ஒரு மரியாதையும்கூட. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II
நேரம் : 1 மணி 15 நிமி.

2. முயற்சி
3. குப்பை கூழங்களால்
4. குருவிடம்

(4 x 2 = 8 புள்ளிகள்)

03.
1. நாங்கள் ஓடினோம்
2. மரங்கள் அசைந்தன

(2 x 2 = 4 புள்ளிகள்)

04.
1. தீர்க்கதரிசி
2. நாத்திகன்
3. ஐங்குரவர்

(3 x 2 = 6 புள்ளிகள்)

05.
1. கிளறின
2. ஆரம்பமாகும்
3. குடிப்போம்
4. இருந்தன

(4 x 2 = 8 புள்ளிகள்)

06.
1. வெளித்தோற்றத்தை கண்டு ஏமாறக்கூடாது
2. சிறிதெனும் சிறப்புண்டு

(2 x 2 = 4 புள்ளிகள்)

07.
1.புகையிரதம் 2. தும்புத்தடி

(2 புள்ளிகள்)

08. பொல்ஹுச

(2 புள்ளிகள்)


09. 1. பாதுகாப்பு 2. கத்தி

(4 புள்ளிகள்)

10. 1. We are Srilankan 2. Air

(2 புள்ளிகள்)

11. (6 புள்ளிகள்) பொருத்தமான வாக்கியங்கள்

12. 310
13. 943
14. புத்துக்கள்
15. 72 பழங்கள்
16. 9m 24cm
17. 108
18. 
19. 40
20. 0.3
21. 28, 32, 36, 48

(10 x 2 = 20 புள்ளிகள்)

22.
23. 1
24. 1

(23 x 1 = 23 புள்ளிகள்)

அழகான தெளிவான எழுத்து - 1 புள்ளி
100 புள்ளிகள்

25. 1
26. 2
27. 3
28. 4
29. 1
30. 1
31. 2
32.
33. 1
34. 4
35. 4
36. 2
37. 3
38. 2
39. 3
40. 1
41. 3
42. 1
43. 2
44. 4
45. 1

# ஆசிரியர்களின் பணிப்புறக்கணிப்பை ஒருபோதும் அனுமதிக்கவே முடியாது!

## அமைச்சர் சரத் வீரசேகர எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 16

"பாடசாலைகளுக்கு வருகை தர விரும்பும் ஆசிரியர்களை எவராவது தடுத்து நிறுத்தினால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்."

- இவ்வாறு அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கக் கூட்டமைப்பினருக்கு மறைமுகமாக எச்சரிக்கை விடுத்துள்ளார் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பயங்கரவாதம் உருவாவதற்கு வழிவகுத்த காரணி சரியாக இருக்கலாம். அவ்வாறு இல்லாவிட்டால் தவறாக இருக்கலாம். எனினும், அந்தவொரு காரணத்துக்காகவும் பயங்கர வாதத்தை நியாயப்படுத்த முடியாது. ஏனெனில் அதன்மூலம் மக்களே பாதிக்கப்படுவார்கள்.

அதேபோல் ஆசிரியர்களின் பிரச்னை நியாயமானதாக இருக்கலாம். அதற்காக தொழிற்சங்க நடவடிக்கையை அனுமதிக்க முடியாது. இதனால் மாணவர்களே பாதிக்கப்படுகின்றனர். எனவே, பாடசாலைகளுக்குச் சமுகமளித்து, கல்வி நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அவ்வாறு வரவிரும்பும் ஆசிரியர்களுக்கு எவராவது அச்சுறுத்தல் விடுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார். (இ)



# சாவகச்சேரி இளைஞர் விபத்தில் உயிரிழப்பு!

தென்மராட்சி, ஒக். 16

சாவகச்சேரியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்த குறித்த இளைஞர் நேற்று அதிகாலை மரணமடைந்தார்.

மடத்தடிப் பகுதியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

படுகாயம் அடைந்த இளைஞர் யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுவந்த நிலையில் உயிரிழந்தார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த 24 வயதான நிரோஷ் என்பவரே மரணமடைந்தார்.

இவர் அண்மையிலேயே வெளிநாடு ஒன்றிலிருந்து நாடு திரும்பியிருந்தவர் என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (இ)

# மாகாண சபை தேர்தலில் சுதந்திர கட்சி தனி வழி?

## விமல், கம்மன்பில கட்சிகளையும் இணைத்து கூட்டணி அமைக்கவும் பேச்சுக்கள் மும்முரம்

**கொழும்பு, ஒக்.16**

**மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட உத்தேசித்துள்ளது என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**



மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் 'வெற்றிலை' சின்னத்தின் கீழ் கூட்டணியொன்றை அமைப்பதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கூட்டணியில் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில தலைமையிலான கட்சியினரையும் இணைத்துக்கொள்வதற்கான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.

கூட்டணி அமைக்கும் நடவடிக்கை வெற்றியளிக்கும் பட்சத்தில் வடமேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராக தயாசிறி ஜயசேகர போட்டியிடத் திட்டமிட்டுள்ளார். (இ)

# பெருந்தொகை துப்பாக்கி ரவைகள் கொழும்பில் கட்டடத்திலிருந்து மீட்பு

கொழும்பு, ஒக். 16

கொழும்பு - பிஸ்டல் வீதியிலுள்ள ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டடமொன்றிலிருந்து, பெருந்தொகையான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிஸ்டல் வீதியில், பல்வேறு தனியார் நிறுவனங்கள் அமைந்துள்ள கட்டடத்தின் 5ஆவது மாடியிலுள்ள மலசலகூடத்தில் இருந்தே, இந்தத் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

ரி - 56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 176 ரவைகளும், 9 மில்லிமீற்றர் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 29 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

துப்பாக்கி ரவைகள், குறித்த கட்டடத்துக்கு எவ்வாறு கொண்டுவரப்பட்டன என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ)

# வேலைக்கு சென்ற குடும்பஸ்தர் கால்வாயிலிருந்து சடலமாக மீட்பு

கம்பஹா, ஒக். 16

கால்வாய் ஒன்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டம், மொறவக்க - பரணவத்த பகுதியிலேயே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ரம்புக்கனை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பணிக்குச் சென்ற நபர் வீடு திரும்பாததையடுத்து, பிரதேச வாசிகளால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போதே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# ஆசிரியர்களை மிரட்டாமல் அவர்களின் கோரிக்கைகளை உடன் நிறைவேற்றுக!

## அரசிடம் எதிரணி அவசர கோரிக்கை

கொழும்பு, ஒக். 16

"அதிபர், ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கான தீர்வுத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைவிடுத்து அவர்களை மிரட்டும் கருத்துக்களை அரசு உடன் நிறுத்த வேண்டும்."

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-

"அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் 24 ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருந்தன. எனினும், 2015 இல் ஆட்சிக்கு வந்த எமது அரசு, குழுவொன்றை அமைத்தது. அதிபர், ஆசிரியர்களுக்கு ஒரே தடவையில் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு இணக்கம் எட்டப்பட்டிருந்தது. 2019 இல் இதற்கான அமைச்சரவைப் பத்திரம் நிறைவேற்றப்பட்டது. 2020 ஜனவரி முதல் ஒரே தடவையில் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எனினும், ஆட்சி மாற்றத்தின் பின்னர் அந்த முடிவை தற்போதைய அரசு நிறுத்தியது. தற்போது அதே திட்டத்தை இரண்டு தடவைகளில் செயல்படுத்துவதற்கு முற்படுகின்றது. இந்த அரசை நம்பமுடியாது.



இன்று மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். உள ரீதியிலான தாக்கங்களும் ஏற்பட்டு வருகின்றன.

எனவே, அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு உரிய தீர்வை ஒரே தடவையில் வழங்க வேண்டும். அதற்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்தி, ஜனவரி முதல் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்" - என்றார். (இ)

# எலி காய்ச்சலால் ஏழு பேர் மரணம்!

இரத்தினபுரி, ஒக். 16

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த ஒன்பது மாதங்களில் எலிக் காய்ச்சலால் 7 பேர் மரணமடைந்தனர் என்று இரத்தினபுரி மாவட்ட தொற்று நோய் பிரிவின் மருத்துவர் லக்மால் கோணார தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 379 பேருக்கு எலிக் காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பலாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவிலேயே எலிக் காய்ச்சலால் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். குறித்த பிரதேச செயலாளர் பிரிவில் 36 பேரும், கொலன்னாவை பிரதேச செயலாளர் பிரிவில் 35 பேரும், பெல்மடுல்லை பிரதேச செயலாளர் பிரிவில் 34 பேரும், இம்புல்பென் பிரதேச செயலாளர் பிரிவில் 32 பேரும், எஹலியகொடை பிரதேச செயலாளர் பிரிவில் 28 பேரும், வெலிகபெலை பிரதேச செயலாளர் பிரிவில் 26 பேரும், எல்பாத்த பிரதேச செயலாளர் பிரிவில் 23 பேரும், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவில் 22 பேரும், கலவான மற்றும் கொடக்கவெல பிரிவுகளில் 20 பேரும், எம்பிலிப்பிட்டி பிரிவில் 19 பேரும், குருவிட்ட பிரிவில் 18 பேரும், கஹவத்த பிரிவில் 14 பேரும், ஓப்பநாயக்க பிரிவில் 13 பேரும், நிவித்திகல மற்றும் உடலவலவ பிரிவில் 10 பேரும், இரத்தினபுரி நகர சபை பிரிவில் 08 பேரும், அயகம பிரிவில் 06 பேரும், கிரிஎல்ல பிரிவில் 04 பேரும் எலிகாய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரி மாவட்டத்தில் 2019ஆம் ஆண்டு 821 பேருக்கும், 2020ஆம் ஆண்டு 1,184 பேருக்கும் எலிக் காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.(இ)

# நாம் வாழ்வதற்கு ஏற்றதாக பூமியை சரிசெய்யவேண்டும்!

## இளவரசர் வில்லியம்ஸ் அழைப்பு

லண்டன், ஒக். 16

நாம் வாழ்வதற்கு ஏற்ற வகையில் பூமியை சரி செய்வதைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, வாழ்வதற்கு மற்றோர் இடத்தை தேடக் கூடாது என்று இங்கிலாந்து இளவரசர் வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றம் காரணமாக உலக நாடுகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றன. பூமி வெப்பமடைவது தொடர்ந்தால், 2050ஆம் ஆண்டுக்குள் மிகப் பெரும் பேராபத்தை உலக நாடுகள் எதிர்கொள்ளக்கூடும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளன.

இந்தநிலையில் உலகின் பெரும் பணக்காரர்களான ஜெப் பேசாஸ், எலன் மாஸ்க் போன்றோர் விண்வெளிக்கு சுற்றுலா செலுத்தும் திட்டத்தை செயல்படுத்துவதில் தீவிரம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து பி. பி. சி. தொலைக்காட்சிக்கு இங்கிலாந்து இளவரசர் வில்லியம்ஸ் அளித்த பேட்டியில், " இந்த உலகின் சிறந்த திறனாளர்கள் நாம் வாழ்வதற்கு ஏற்ற வகையில் இந்த உலகத்தை சரிசெய்யத்தான் முயற்சி செய்ய வேண்டும். அதைவிட்டு வாழ்வதற்கு வேறு இடத்தை தேட முயற்சிக்கக் கூடாது. காலநிலை மாற்றம் குறித்த எச்சரிக்கை இளைஞர்களிடத்தில் கவலையை ஏற்படுத்தி உள்ளது. காலநிலை மாற்றம் குறித்து தலைவர்கள் சிறப்பாக பேசுகிறார்கள். ஆனால், செயலில் காட்டுவதில்லை" என்று தெரிவித்தார். (ஐ)





# மனித உரிமைகள் பேரவை ஆணைக்குழுவில் இந்தியா!

நியூயோர்க், ஒக். 16

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை ஆணைக்குழுவின் உறுப்பு நாடாக மீண்டும் இந்தியா தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆறாவது முறையாக இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள இந்தியா எதிர்வரும், 2024 ஆம் ஆண்டு வரை பதவியில் தொடரும்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணைக்குழுவில் 47 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. இவற்றின் பதவிக்காலம் 3 ஆண்டுகளாகும். இந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் இந்தியாவின் தற்போதைய பதவிக்காலம் வரும் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் மனித உரிமைகள் பேரவையின் ஆணைக்குழு உறுப்பினர் பதவிக்கான தேர்தல் வியாழக்கிழமை நடந்தது. 193 நாடுகள் வாக்களிக்கத் தகுதி பெற்ற இந்தத் தேர்தலில் இந்தியாவுக்கு 184 வாக்குகள் ஆதரவாகக் கிடைத்தன. (ஐ)

# உலகில் கடன்சுமை அதிகமான நாடுகள்!

வாஷிங்டன், ஒக். 16

உலகளவில் அதிக கடன் சுமை கொண்ட முதல் 10 நாடுகளின் பெயர்களை உலக வங்கி வெளியிட்டுள்ளது. இதில் பாகிஸ்தான் இடம்பெற்றுள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான சர்வதேச கடன் சுமை குறித்த புள்ளிவிவர அறிக்கையை உலக வங்கி வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில், "அங்கோலா, வங்கதேசம், எதியோப்பியா, கானா, கென்யா, மங்கோலியா, நைஜீரியா, பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், சாம்பியா ஆகிய நாடுகள் கடன் சுமை அதிகம் கொண்டுள்ள முதல் 10 நாடுகள்.

வெளிநாட்டு வங்கிகளில் இந்த நாடுகளுக்கு அதிக கடன் உள்ளது. இந்த நிலையில் கொரோனா தொற்றை கருத்தில் கொண்டு அந்தக் கடன்களைத் தற்காலிகமாக இரத்து செய்யும் நடைமுறைக்கு அந்த நாடுகள் தகுதி பெற்றுள்ளன.

2020ஆம் ஆண்டு இந்த நாடுகளின் மொத்தக் கடன் இருப்பு 50,9000 கோடி அமெரிக்க டொலர்கள். 2019ஆம் ஆண்டை ஒப்பிடுகையில், இது 12வீதம் அதிகம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஆப்கானில் குண்டுவெடிப்பு; 16 பேர் பலி; 32 பேர் காயம்!

காபூல், ஒக். 16

ஆப்கானிஸ்தானின் கந்தஹார் நகரில் நேற்று மசூதியில் நடந்த குண்டுவெடிப்பில் குறைந்தது 16 பேர் உயிரிழந்தனர். 32 பேர் காயமடைந்தனர்.

ஷியா முஸ்லிம்களின் இமான் பார்கா என்ற மசூதியிலேயே இந்தக் குண்டுவெடிப்பு இடம் பெற்றது.

குண்டுவெடிப்புக்கான காரணம் உடனடியாகத் தெரிய வரவில்லை. ஆனால், தற்கொலை தாக்குதலாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. மூன்று இடங்களில் குண்டு வெடித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

தலிபான்கள் தற்போது அந்தப் பகுதியில் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ இரத்ததானம் செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)





# லெபனானில் போராட்டத்தில் துப்பாக்கி சூடு; 6 பேர் மரணம்!

பெய்ரூட், ஒக். 16

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது ஆறு பேர் உயிரிழந்தனர். அத்துடன், 32 பேர் காயமடைந்துள்ளனர்.

ஷியா முஸ்லிம் குழுக்களான ஹிஸ்புல்லா மற்றும் அதன் ஆதரவாளர்கள் கடந்த ஆண்டு நகரத்தின் துறைமுகத்தில் நடந்த மிகப்பெரிய குண்டுவெடிப்பை விசாரித்த நீதிபதிக்கு எதிராக வியாழக்கிழமை திரண்டு போராட்டம் நடத்தினர். இதன்போதே துப்பாக்கி சூடு முநடத்தப்பட்டுள்ளது.

லெபனான் படைத் தரப்பினர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

219 பேரைக் கொன்ற பெய்ரூட் துறைமுக வெடிப்பு தொடர்பான விசாரணையை பெரும் பதற்றம் சூழ்ந்துள்ளது. நீதிபதி பக்கச்சார்பானவர் என்று ஹிஸ்புல்லா மற்றும் அதன் கூட்டாளிகள் கூறுகின்றனர். ஆனால், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அவரின் செயல்பாட்டை ஆதரிக்கின்றன. (ஐ)

# ஸ்புட்னிக் தடுப்பூசிக்கு உலகளவில் தட்டுப்பாடு!

மொஸ்கோ, ஒக். 16

ரஷ்யாவின் ஸ்புட்னிக்- V கரோனா தடுப்பூசி உற்பத்தியில் தட்டுப்பாடு நிலவுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனா வைரஸுக்கு எதிராக முதன்முதலாக தடுப்பூசியை அறிமுகம் செய்த நாடு ரஷ்யா. இந்த நிலையில் ரஷ்யாவில் ஸ்புட்னிக்-V தடுப்பூசிக்கு வெளிநாடுகளில் மட்டுமல்லாது உள்நாட்டிலும் தட்டுப்பாடு நிலவுகிறது.

ஸ்புட்னிக் தடுப்பூசியின் முதல் தவணையைப் போட்டவர்கள் இரண்டாவது தவணை தடுப்பூசி போட முடியாமல் காத்திருப்பதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

"தென்னமெரிக்க, மத்திய கிழக்கு நாடுகள் ரஷ்யாவின் ஸ்புட்னிக்-V தடுப்பூசிக்காகக் காத்திருக்கின்றன. சுமார் 100 கோடி டோஸ் தடுப்பூசிகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப ரஷ்யா உறுதியளித்தது. ஆனால், இதுவரை 4.8 வீத கொரோனா தடுப்பூசிகளை மட்டுமே ரஷ்யா ஏற்றுமதி செய்துள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் விரைவில் ஸ்புட்னிக்- V கொரோனா தடுப்பூசி தட்டுப்பாடு விரைவில் நீங்கும் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது. (ஐ)

# உலகின் உயர்ந்த பெண்ணாக துருக்கி நாட்டவர் அறிவிப்பு!

டப்ளின், ஒக். 16

உலகின் உயரமான பெண்ணாக துருக்கியைச் சேர்ந்த ருமேசா கெல்கி என்பவர் தெரிவாகியுள்ளார்.

இதுகுறித்து கின்னஸ் உலக சாதனை அமைப்பின் தலைமை அதிகாரி கிரைக் கிளிண்டே கூறும்போது, "கூட்டத்துக்கு இடையே நிமிர்ந்திருக்கும் அவர் பலருக்கும் முன்னுதாரணம். நான் இந்தச் செய்தியை உலகிற்கு அறிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். துருக்கியைச் சேந்த ருமேசா கெல்கி உலகின் உயரமான பெண்ணாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவரது உயரம் 7 அடி 7 அங்குலம்" என்று தெரிவித்துள்ளார்.

கெல்கி, வீவர் என்ற நோயின் காரணமாக அவருக்கு அபரிதமான எலும்பு வளர்ச்சி ஏற்பட்டது. இதனால் அவர் நடப்பதற்கு கைப்பிடியை பயன்படுத்தியே நடக்கிறார்.

உலகின் உயர்ந்த பெண்ணும், ஆணும் துருக்கியில் தான் வாழ்கிறார்கள். உலகின் உயரமான ஆணான 8 அடி 8 அங்குலம் உயரம் கொண்ட சுல்தான் கோசன் துருக்கியில்தான் வாழ்கிறார். (ஐ)





# டேவிஸ் கிண்ணம் முர்ரே விலகல்!

லண்டன், ஒக். 16

டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடரில் பங்கேற்க மாட்டார் என்று பிரிட்டனின் பிரபல வீரரான அண்டி முர்ரே தெரிவித்துள்ளார்.

டேவிஸ் கிண்ணத் தொடர் நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்நிலையிலேயே அண்டி முர்ரே தனது விலகலை அறிவித்துள்ளார்.

அடுத்த வருட தொடக்கத்தில் அவுஸ்திரேலியன் ஓப்பன் ரென்னிஸ் போட்டிகள் தொடங்க இருக்கின் றன. இதற்கு தயாராகும் விதமாகவே டேவிஸ் கிண்ணத் தொடரிலிருந்து விலகுகிறார் என்று அவர் அறிவித்துள் ளார். (ஐ)

# ரபின்ஹா இரட்டை கோல்; பிரேசில் அசாத்திய வெற்றி

பிரேசிலியா, ஒக். 16

விங்கர் ரபின்ஹா பிரேசிலுக்காக முதல் கோலை அடிக்க, உருகு வேயை 4 -1 என்ற கணக்கில் வென்று உலகக் கிண்ணத்துக்கான தகுதியை நெருங்கியுள்ளது பிரேசில்.

2022 உதைபந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டிக்கான தகுதி சுற் றுப் போட்டிகள் தற்போது நடந்து வருகின்றன. இதுவரை மூன்று நாடுகள் உலகக் கிண்ணத் தொட ருக்கு தகுதி பெற்றுள்ள நிலையில், நேற்று தென்னமெரிக்க நாடுகளான பிரேசில், உருகுவே அணிகள் மோதின.

பிரேசிலில் நடந்த இந்தப் போட்டியில் போட்டி ஆரம்பித்த 10ஆவது நிமிடத்தில் நெய்மர் கோல் அடித்து அசத்தினார்.18 ஆவது நிமிடத்தில் புதிய வீரரான ரபின்ஹா கோல் அடித்தார். இரண்டாவது பாதி ஆட்டத்திலும் - 58ஆவது நிமிடத்தில் ரபின்ஹா இரண்டாவது கேலை அடித்து அசத்தினார்.

பதிலுக்கு உருகுவேயின்




77ஆவது நிமிடத்தில் லூயின் சுராஷ் கோல் அடித்தார். ஆனால், வேறு எந்த வீரரும் உருகுவே அணிக்காக கோல் அடிக்கவில்லை.

3 - 1 என்ற கோல் கணக்கில் பிரேசில் அணி முன்னிலையில் இருந்தபோது 83ஆவது நிமிடத்தில் கப்ரியால் பார்போலா கோல் அடிக்கவே இறுதியில், பிரேசில் 4 - 1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் பிரே சில் அணி உலகக் கிண்ணத்துக்கான தகுதி போட்டியில் தென்னமெரிக்க கண்டத்தில் பிரேசில் முதலிடம் பெற்றுள்ளது. இரண்டாவது இடத் திலுள்ள ஆர்ஜென்ரீனா அணியை விட 6 புள்ளிகளால் முன்னிலை வகிக்கிறது பிரேசில். (ஐ)

# நியூசிலாந்துக்கு எதிரான தொடர் மூத்த வீரர்களுக்கு இந்தியா ஓய்வு




புதுடில்லி, ஒக். 16

நியூசிலாந்து - இந்திய அணிகள் இருபது - 20, டெஸ்ட் தொடர் களில் விளையாடவுள்ளன. நவம்பர் 17ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தத் தொடரில் மூத்த வீரர்களுக்கு ஓய்வு அளிக்க இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு சபை திட்டமிட்டுள்ளது.

விராட் கோலி, பும்ரா, முஹமது சமி போன்ற மூத்த வீரர்களுக்கே இந்தத் தொடரில் ஓய்வு அளிக்கப் படுகின்றது. தொடர்ச்சியாக அவர்கள் கொரோனா பாதுகாப்பு வளையத்தில் இருப்பதாலேயே அவர்களுக்கு ஓய்வு அளிக்கப் படுகின்றது. இவர்களுக்குப் பதி லாக ஹர்ஷல் பட்டேல், வெங்க டேஷ் ஐயர் போன்ற இளம் வீரர் களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வுள்ளது.

இதே சமயம், இந்தத் தொடருக் கான பயிற்றுவிப்பாளராக ராகுல் டிராவிட் நியமிக்கப்படவுள்ள மையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# கிரெம்ளின் கிண்ணம் விலகினார் ரடுகானு!

லண்டன், ஒக். 16

ரஷ்யாவின் மொஸ்கோவில் நடக்கவுள்ள கிரெம்ளின் கிண்ண ரென்னிஸ் தொடரிலிருந்து அமெரிக்க ஓப்பன் சம்பியன் எம்மா ரடுகானு விலகினார்.

பிரிட்டனை சேர்ந்த 18 வயதே ஆன எம்மா, தனது முதலாவது கிராண்ட்ஸ்லம் பட்டமான அமெரிக்க ஓப்பனை கைப்பற்றிய பின்னர் ஒரேஒரு தொடரிலேயே விளையாடினார்.

அமெரிக்காவின் இந்தியன் வெல்ஸ் போட்டியில் பங்கேற்ற அவர் முதல் சுற்றிலேயே தோல்வியை சந்தித் தார். இந்த நிலையிலேயே கிரெம்ளின் கிண்ணத்திலி ருந்து அவர் விலகினார்.

இவர், ருமேனியா மற்றும் ஆஸ்திரிய தொடர்களில் விளையாட திட்டமிட்டுள்ளார். இது தொடர்பில் எம்மா கூறுகையில், "துரதிர்ஷ்டவசமாக போட்டி அட்டவணையில் நான் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிலை எழுந்துள்ளது. அடுத்த ஆண்டு ரஷ்ய ரசிகர்களுக்கு முன்பாக நிச்சயம் விளையாடுவேன் என்று நம்புகிறேன்", என்றார். (ஐ)

# மகளிர் பிக்பாஷ் தொடர் சிட்னி சிக்சர்ஸ் வெற்றி!

சிட்னி, ஒக். 16

மெல்பர்ன் அணியை 6 விக்கெட்களால் வெற்றி கொண்டது சிட்னி சிக்ஸர்ஸ் அணி.

அவுஸ்திரேலியாவின் மிகப் பிரபலமான இருபது - 20 தொடரான பிக்பாஷ் தொடரின் மகளிருக்கான 7ஆவது தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதில் 8 அணிகள் பங்கேற்கின்றன.

நேற்று முன்தினம் நடந்த முதல் போட்டியில் போட்டியில் மெல்பர்ன் ஸ்ரார்ஸ் மற்றும் சிட்னி சிக்சர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. கொரோனா பெருந்தொற்று பரவல் உள்ளிட்ட பிரச்னைகளால் வீராங்கனைகள் மைதானத்திற்கு வருவதற்கு தாமதம் ஆனது.

இதனால் போட்டி 11 ஓவர்களாகக் குறைக்கப்பட் டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மெல்பர்ன் ஸ்ரார்ஸ் அணி 11 ஓவர் முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 99 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக அந்த அணியின் எல்லிஸ் விலானி 54 ஓட்டங்கள் எடுத்தார்.




100 ஓட்டகள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சிட்னி சிக்சர்ஸ் அணி களமிறங்கியது. அந்த அணியின் தொடக்க வீராங்கனை அலிஷா ஹீலி 27 பந்துகளில் 57 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் 10.2 வது ஓவரில் சிட்னி சிக்சர்ஸ் அணி 4 விக்கெட் இழப் பிற்கு 100 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது. (ஐ)

# இழுவை படகுகளுக்கு எதிரான பேரணிக்கு சகல மக்களும் முழு ஆதரவு வழங்கவேண்டும்

## கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் அறிக்கை

கொழும்பு, ஒக். 16

"இழுவைப் படகு தடைச் சட்டத்தை முறையாக அமுல்படுத்துமாறு கடற்தொழில் நீரியல்துறை அமைச்சரைக் கோரி நாளை 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை கடல் வழியாக நடைபெறவுள்ள எதிர்ப்புப் பேரணிக்கு அனைத்து மக்களும் ஆதரவு நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

"எமது கடல் வளத்தையும் நீரியல் வளத்தையும் மிக மோசமாக அழிக்கும் இழுவைப் படகுகள், 2017ஆம் ஆண்டின்



11ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆனாலும், கடற்றொழில், நீரியல் அதிகாரிகள் இந்தத் தடையை அமுல்படுத்தாத காரணத்தால் உள்ளூர், வெளிப்பிரதேச மற்றும் வெளிநாட்டு இழுவைப்படகுகள் தொடர்ச்சியாக எமது கடல் வளத்தை முற்றாக சூறையாடுகின்றன.

இந்தநிலை தொடருமாக இருந்தால் அடுத்த தலைமுறைக்கே கடல் வளம் இல்லாது போய்விடும்.

இந்தச் சட்டத்தை முறையாக அமுல்படுத்தக் கோரி நாளை 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை கடல் வழியான எதிர்ப்புப் பேரணி இடம்பெறும்.

இழுவைப் படகு தடைச் சட்டத்தை முறையாக அமுல்படுத்துமாறு கடற்தொழில் நீரியல்துறை அமைச்சரைக் கோருவதே இந்தப் பேரணியின் நோக்கமாகும். அனைத்து மக்களும் இந்த எதிர்ப்புப் பேரணிக்கு ஆதரவு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-2)

# பாடசாலை கொத்தணியை உருவாக்க முயற்சிக்கின்றீரா?

## அரசிடம் இராதாகிருஷ்ணன் எம்.பி. கேள்வி

நுவரெலியா, ஒக். 16

"கொழும்பு மாவட்டத்துக்கு மாத்திரம் பாடசாலை மாணவர்களுக்குக் கொரோனா தடுப்பூசியை வழங்கிவிட்டு பாடசாலையை ஆரம்பிக்க அரசு முயற்சி செய்வது மீண்டும் ஒரு பாடசாலை கொரோனா கொத்தணியை உருவாக்குவதற்கா? என்ற கேள்வி உருவாகின்றது."

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசின் அறிவித்தலின்படி அடுத்து வருகின்ற நாட்களில் கொழும்பு மாவட்டத்தின் பாடசாலை மாணவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசியை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்பதாக நிறைவு செய்யவுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களுக்குத் தடுப்பூசியை வழங்குவதற்கு அரசு எதிர்பார்ப்பதாகவும் தெரியவருகின்றது.

இந்தத் திட்டத்தை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், மாணவர்கள் அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். அப்படியானால் அனைத்து மாணவர்களுக்கும் தடுப்பூசியை வழங்கிய பின்பு பாடசாலையை ஆரம்பிக்க வேண்டும்.

அப்படி இல்லாமல் கொழும்பில் இருக்கின்ற மாணவர்களுக்கு ஒரு சலுகையும், ஏனைய மாணவர்களுக்கு ஒரு சலுகையையும் செய்ய



முற்படுவது மிகவும் தவறான ஒரு செயல்பாடாகும்.

நான் முன்னாள் இராஜாங்க கல்வி அமைச்சர் என்ற வகையில் இந்தச் செயல்பாட்டை பிழையான ஒரு முன்உதாரணமாகவே கருதுகின்றேன்.

மாணவர்கள் மத்தியில் தேவையற்ற பிரச்சினைகளை இது உருவாக்கும். எனவே, அனைத்து மாணவர்களுக்கும் ஒரே தடவையில் அல்லது படிப்படியாகத் தடுப்பூசியை வழங்கிய பின்பு பாடசாலையை ஆரம்பிப்பதே பொருத்தமானதாக இருக்கும்.

இன்றைய சூழ்நிலையில் ஆசிரியர்கள் ஒரு புறம் தொடர்ச்சியாகப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறான ஒரு நிலையில் பாடசாலைகளை ஆரம்பிப்பது என்பது கேள்விக்குறியான - சாத்தியமான செயல்பாடாகத் தெரியவில்லை. ஆசிரியர்களும் அதிபர்களும் இல்லாமல் எவ்வாறு பாடசாலைகளை ஆரம்பிப்பது என்ற கேள்வி எழுகின்றது.

எனவே, இந்த அனைத்து விடயங்களையும் அரசு கருத்தில்கொண்டு மாணவர்களின் நன்மை கருதி சரியான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்" - என்றார். (இ)

# தமிழர் அபிலாசைகளுக்கு எதிரானவர்கள் மீனவர்களுக்காக போராடுவதாக வேஷம்!

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.16

**தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராகச் செயல்பட்டவர்கள் இன்று மீனவர்களுக்காகப் போராடுவதாக வேஷம் போடுகின்றனர் என்று தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்பாளர் இன்பம் குற்றஞ்சாட்டினார்.**

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஊடக சந்திப்பு யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்திய இழுவை மடித் தொழிலால் மீன் வளங்கள் அழிக்கப்படுவதுடன் எமது தொழில் வளங்களும் நாசமாக்கப்படுகின்றன.

அண்மையில் வடமராட்சியில் மீனவர்கள் தங்களுக்கு ஏற்பட்டு வரும் பிரச்னைகள் தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அது அவர்களுக்கு மட்டுமான பிரச்னை அல்ல. ஒட்டுமொத்த மீனவர்களுக்குமான பிரச்னை.

மீனவர்களின் பல்வேறு பிரச்னைகளுக்காக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் குரல் கொடுத்து வந்த நிலையில் அதனை அரசும் அரச தரப்பினரும் குழப்புகின்ற வேலையைச் செய்து வருகின்றனர்

மீனவர்களுடைய பிரச்னை அரசியல் நோக்கத்துடன் கையாளப்படுகின்றது. இரண்டு நாட்டு மீனவர்களுக்கும் மோதலை ஏற்படுத்துவதற்காக




ஒரு சிலர் திட்டமிட்டுச் செயல்படுகின்றனர்.

இரு நாட்டு மீனவர்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்து அவர்களைப் பலிக்கடாவாக்குகின்ற செயல்பாடுகளுக்கு ஒரு சில கோடாரிக் காம்புகளும் துணை நிற்கின்றன.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு எதிராகச் செயல்பட்டவர்கள் இன்று மீனவர்களுக்காகப் போராடுவதாக வேஷம் போடுகின்றனர். அவர்களுடைய நோக்கம் இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதா? இந்தப் பிரச்னையை வைத்து குளிர்காய்வதா? என்கின்ற கேள்வி எழுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதுவரை எமது மீனவர் சங்கங்கள் சந்தித்த போது இலங்கை கடற்றொழில் அமைச்சர் எதுவும் செய்யவில்லை என்றும், நாங்கள் இந்த விடயத்தில் எந்த முடிவும் எடுக்க முடியாது என்றும், உரிய தரப்புக ளுக்குத் தெரியப்படுத்துவோம் என்றும் தூதுவர் தெரிவித்தார்" - என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட ரட்ணசிங் கம் முரளீதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

"இதற்கு மேலதிகமாக தற்போது கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தத் திட்டத்தின்போது கடல்நீர் சுத்திகரிக்கப்பட்டு அதில் உள்ள உப்பு செறிவு என்பது மீண்டும் கடலில் கலக்கின்ற ஒரு அபாய நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக கடல் வாழ் உயிரினங்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதற்கான சூழல் காணப்படுகின்றது.

வெளிநாட்டு மீனவர்கள் இலங்கைக் கடலில் மீன் பிடிப்பதற்கான பாஸ் நடைமுறை வழங்குவதற்கான திட்டம் தற்போது பரிசீலனையில் காணப்படுகின்றது. இது மிகவும் ஆபத்தானது" - என்றார். (இ - 03)

# புதையல் தோண்டிய நால்வர் சிக்கினர்!

பதுளை, ஒக். 16

பதுளை, எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட நால்வரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். எல்ல பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமையவே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் பூஜைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது 45, 51, 53 மற்றும் 54 வயதுகளையுடைய பண்டாரகம, பல்லபொடுவ மற்றும் தெமோதர பகுதியை சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை விசாரணையின் பின்னர் பண்டார வெல நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைளைப் பொலிஸார் எடுத்துள்ளனர். (இ)

## எங்கள் கட்சிகளின்...

தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக எந்தவித பேச்சும் நடைபெறவில்லை. எல்லாக் கட்சிகளும் இணைந்து சில விடயங்களை அரசாங்கத்துடன் பேச முடியுமா என்பது தொடர்பாகவே ஆராயப்பட்டு வருகின்றது. அதில் மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமான பேச்சுக்கள் இதுவரை நடைபெறவில்லை.

என்னைப் பொறுத்த வரையிலே மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் தற்போதைக்கு நடத்தாது என்பதே என்னுடைய கருத்து. அரசிடம் பணமில்லை. கருத்துக் கணிப்பு மூலமாக அரசாங்கம் தனக்குள்ள ஆதரவு குறைந்ததை உணர்ந்துள்ளது. ஆகவே, மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் பிரச்னை ஆகிவிடும் என்ற அடிப்படையில் அவர்கள் தேர்தலைத் தள்ளி வைக்கவே விரும்புவார்கள்.

அரசாங்கத்துக்கு மாகாண சபையைத் தொடர்ந்தும் வைத்திருக்கக்கூடாது என்ற எண்ணமே இருக்கின்றது. புதிய அரசமைப்பின் மூலம் மாகாண சபை முறைமையை நீக்கி முற்றிலும் சிங்கள - பௌத்த அரசமைப்பைக் கொண்டு வருவார்களோ என்பது எனது சந்தேகம். தற்போது மாகாண சபைத் தேர்தலை நடத்துவது அரசாங்கத்துக்கு நன்மையைத் தராது; தீமையையே தரும் என்ற அடிப்படையிலே மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது என்பதே என்னுடைய கருத்து” - என்றார்.

“மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் நீங்கள் முதலமைச்சர் வேட்பாளராகக் களம் இறங்குவீர்களா?” எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கும் போது,

“என்னை அரசியலுக்குள் கொண்டு வருவதற்கு கட்சிகளின் தலைவர்கள் பலர் சேர்ந்து எத்தனையோ முறை அழைத்த தன் பேரில்தான் இறுதியாக உடன்பட்டேன். இப்போதும் எங்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து நீங்கள் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் எனக் கேட்டால் அது என்னுடைய கடமை என ஏற்று மீண்டும் களத்தில் குதிக்கத் தயாராக இருக்கின்றேன்” - என்றார். (இ)

## 17,18ஆம் திகதி...

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளை கண்டித்து வடக்கு மீனவர்களுக்கு ஆதரவாக நாளை 17 ஆம் திகதி கடலிலும், விவசாயிகளின் பிரச்னைகளை தீர்க்க வலியுறுத்தி நாளை மறுதினம் 18ஆம் திகதி வடக்கு - கிழக்கு கமநல சேவைகள் திணைக்களம் முன்பும் போராட்டங்களை நடத்த சுமந்திரன் எம். பி. அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளின் தலைவர்களான மாவை சோ. சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், த. சித்தார்த்தன் ஆகியோர் இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழைப்பு அல்ல என்று தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மீனவர்கள், விவசாயிகளின் பிரச்னைகளுக்காக போராட வேண்டும். அதை யாரும் தனிநபர்கள் செய்கிறார்களோ தெரியவில்லை. ஆனால், கூட்டமைப்பு 17, 18ஆம் திகதிகளில் போராட்ட முடிவுகளை எடுக்கவில்லை. அரசாங்கத்தின் கொள்கைகளால் விவசாயிகள், மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அதற்காக பாராளுமன்றத்திலும் வெளியிலும் கூட்டமைப்பு தொடர்ந்து குரல் கொடுக்கும்.

இந்த விடயங்களை கையாள்வது குறித்து கூட்டமைப்பு ஆராயும். அதே நேரம், அரசியல் உள்நோக்கங்களுடன் சிலர் இந்த விவகாரங்களை கையிலெடுத்து, கூட்டமைப்புக்குள் வீணான குழப்பங்களை ஏற்படுத்துபவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்கிறோம்” என்று தெரிவித்தனர்.

இதேசமயம், இந்தப் போராட்டங்களுக்கான ஏற்பாடுகளை சுமந்திரன் எம். பியும் அவருக்கு சார்பான இரா. சாணக்கியன், த. கலையரசன் எம். பிக்களும் முன் னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் ஆகியோரே மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## லங்கா ஐ.ஓ.சி....

இதேவேளை, 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்கு பின்னர் உலக சந்தையில் அதிகளவான எரிபொருள் விலை நேற்று பதிவானது. ப்ரென்ட் (Brent) ரக எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று முன்தினத்தை விட மூன்று சதவீதத்தினால் அதிகரித்து 85.10 அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

திடீரென எரிபொருள் விநியோகம் செயற்பாட்டை ஐ.ஓ.சி நிறுவனம் நிறுத்தியமையால் தமது சங்கத்தினரும், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்களும் பாரிய பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் கோசல விதான பத்திரண தெரிவித்தார்.

லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அண்மையில் அறிவித்திருந்தது.

இதற்கமைய ஒரு லீற்றர் டீசல் 25 ரூபாயினாலும், ஒரு லீற்றர் பெற்றோல் 15 ரூபாயினாலும் அதிகரிக்க எதிர்பார்ப்பதாக அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான பின்னணியில் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகத்தை இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கை - இந்திய...

அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:

“கடந்த 11-10-2021 அன்று நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிப் படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 23 மீனவர்கள், 13-10-2021 அன்று, பாரம்பரிய மீன்பிடித்தளமாக உள்ள பருத்தித்துறை அருகே இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டு, காரைநகர் கடற்படைத் தளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இலங்கைக் கடற்படையினரின் இந்த நடவடிக்கை மிகவும் கண்டிக்கத்தக்கது.

இந்திய, இலங்கை மீனவர்களுக்கிடையேயான இந்த நீண்ட காலப் பிரச்னையில் உடனடியாக இந்தியப் பிரதமர் தலையிட்டு, இப்பிரச்னையை நிரந்தரமாகத் தீர்த்திட, உறுதியான வழிமுறைகளைக் காண வேண்டும்.

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள 23 மீனவர்களையும், அவர்களின் மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட, இலங்கை அதிகாரிகளிடம் உறுதியான, தீர்க்கமான முறையில் இந்தப் பிரச்னையை எடுத்துச் சென்றிட இந்திய வெளியுறவு அமைச்சகத்திற்கு பிரதமர் வலியுறுத்த வேண்டும்.

மேலும், இலங்கைக் கடற்படையினரால் அப்பாவி மீனவர்கள் தொடர்ந்து இதுபோன்று தாக்கப்படுவது ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தியப் பிரதமர் உரிய வழிமுறைகளை கையாண்டு, இதற்கு நிரந்தரத் தீர்வினைக் காண வேண்டுமென்றும் கூறியுள்ளார். (அ)

## 666 தொற்றாளர்...

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 30 ஆயிரத்து 421 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 354 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 91 ஆயிரத்து 958 ஆக உயர்வடைந்துள்ளது.

# ‘திவிநெகும’ வழக்கிலிருந்து பஸில் ராஜபக்ஷ விடுதலை

கொழும்பு, ஒக். 16

திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதியை முறையற்ற வகையில் பயன்படுத்தினார் எனத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் இருந்து நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கித்சிறி ரணவக்க ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப் பத்திரங்களை சட்டமா அதிபர் தரப்பு நீக்கிக்கொண்டதையடுத்து, இருவரையும் அந்த வழக்கில் இருந்து விடுதலை செய்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2015 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதியை முறையற்ற வகையில் பயன்படுத்தி அரசுக்கு 36.5 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தினார் எனத் தெரிவித்து அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும திணைக்களத்தின் முன் னாள் பணிப்பாளர் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிராக நல்லாட்சி அரசு காலப்பகுதியில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த இருவருக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் போதுமான சாட்சியங்கள் இல்லாமையால் குற்றப் பத்திரங்களை நீக்கிக்கொள்வதற்கு அண்மையில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (இ)

# ‘பாராளுமன்றத்தில் திலகர்’ மின்புத்தக வெளியீடு

நுவரேலியா, ஒக். 16

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜாவின் பாராளுமன்ற உரைகளின்தொகுப்பு ”பாராளுமன்றத்தில் திலகர்” தொகுதி 1, (2015 ஆம் ஆண்டு) மின் நூலாக்கப்பட்டு பாக்யா பதிப்பக வெளியீடாக இன்று இலங்கை நேரம் மாலை 7 மணிக்கு மெய்நிகராக நிகழ்நிலையில் இடம்பெறவுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் செயலாளர் நாயகமும் முன்னாள் மத்திய மாகாண சபை உப தவிசாளரும் பிரபல மலையக எழுத்தாளருமான மு. சிவலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நூல் குறித்தான உரைகளை மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் ஸ்தாபக செயலாளர் நாயகமும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் அரசியல் ஆய்வாளருமான பி. ஏ. காதர் (லண்டன் ), அரசியல் ஆய்வாளர் சி.அ. யோதிலிங்கம் (யாழ்ப்பாணம்) , பெப்ரல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி, சமூகப் பண்பாட்டு ஆய்வறிஞர் ஏ.பி.எம். இத்ரிஸ் (மட்டக்களப்பு), தாயகம் திரும்பியோர் உரிமை மீட்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும் வழக்குரைஞருமான தமிழகன் (இந்தியா), அரசியல் எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம் (பிரான்ஸ்) ஆகியோர் வழங்க உள்ளனர். ஏற்புரையை நூலாசிரியர் மல்லியப்புசந்தி திலகர் வழங்க நிகழ்ச்சிகளை பிரபல அறிவிப்பாளர் நாகபூஷணி கருப்பையா தொகுத்தளிக்கவுள்ளார்.

Meeting ID: 891 8665 8150

# திருக்குமரன் நடேசனிடம் 2 மணிநேரம் வாக்குமூலம்

கொழும்பு, ஒக். 16

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் கணவர், தொழில் அதிபர் திருக்குமார் நடேசன் இரண்டாவது தடவையாக இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் நேற்று சுமார் 2 மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

உலகளவில் பல்வேறு பிரமுகர்களின் ஊழல்களை வெளிப்படுத்திய பெண்டோரா ஆவணத்தில், அவரது பெயரும் உள்ளடக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகின.

இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு அவர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

அதேநேரம் பெண்டோரா ஆவணம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு குழு ஒன்றை நியமிக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவருக்குப் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதனடிப்படையில் முன்னெடுக்கப்படும் விசாரணையில் வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று முற்பகல் 11 மணியளவில் அவர் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகிருந்தார்.

சுமார் 2 மணித்தியாலங்களுக்குப் பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறினார் என்று இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

முன்னதாக கடந்த வாரம் வெள்ளிக்கிழமையும் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் அவர் முன்னிலையாகியிருந்தார். அன்றைய தினம் அவரிடமிருந்து மூன்று மணித்தியாலங்கள் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## நாளைய...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாளைய தினம் இடம்பெறவுள்ள போராட்டம் அவரது தனிப்பட்ட நோக்கங்களுக்கானது. இந்த மீனவர் போராட்டத்துக்கு ஆதரவும் இல்லை. எதிர்ப்பும் இல்லை. பல்வேறு வடிவங்களில் அவர் போராட்டங்களைச் செய்யலாம். அது அவரது அரசியலுக்கானது. எங்கள் கடற்தொழில் சங்கங்கள் சார்ந்த பிரச்னைகளை அணுகியே மேற்கொள்ள வேண்டும். நாங்கள் எந்த அரசியல்வாதிகளையும் வெறுக்கவில்லை.

எமது பிரச்னை என்றால் எங்களோடு கலந்தாலோசித்தே மேற்கொள்ளவேண்டும். யாழ் மாவட்டத்தில் 117 கடற்தொழிலாளர் சங்கங்கள் உண்டு. 11 சமாசங்கள் மற்றும் சம்மேளனம் என்பன இருக்கின்ற போதும் இந்த பிரச்னை தொடர்பில் அவர் எவருடனும் உரையாடவில்லை. மீனவர்களின் பிரச்னை ஒருபோதும் பகடைக்காயாகப் பயன்படுத்த வேண்டாம். மீனவர் பிரச்னையை மீனவர்களுடன் சேர்ந்தே மேற்கொள்ளவேண்டும்-என்றார்.

## கொரோனாவால்...

30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 3 ஆண்களும் இரண்டு பெண்களுமாக 5 பேர் மரணித்துள்ளனர்.

இதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்ட 14 பேரின் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. அவர்களில் 8 ஆண்களும், 6 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## படையல் உண்டவர்...

ஆறுமுகம் யோகம்மா (வயது - 82) என்பவரே உயிரிழந்தார்.

நவராத்திரி விழா வீட்டுப் பூசை தினமான நேற்று முன்தினம் வீட்டில் நடைபெற்ற வழிபாட்டின் பின்னர் சுவாமிக்கு படையிலிடப்பட்ட அவல், கடலை என்பவற்றை உண்டபோதே குறித்த மூதாட்டி மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். (ஐ-02)

ஈழநாடு
Eelanadu




# 7 மூளைகளை கொண்ட பஸில் ராஜபக்ஷ எங்கே?

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் கேள்வி



கொழும்பு, ஒக். 16

“பொருளாதாரத்தில் அதிசயங்களைச் செய்யக்கூடிய ஏழு மூளைகளைக் கொண்ட ஒருவர் இருக்கின்றார் எனப் பெருமை பேசிய அரசு, முன்னெப்போதும் இல்லாத வகையில் இப்போது மக்களை ஒடுக்குகின்றது. இன்று கிராமம் கிராமமாக, வீடு வீடாக இல்லை என்ற வார்த்தையே மற்றும் பொருளாதார நெருக்கடியின் வேதனையிலும் மக்கள் உள்ளனர். அந்த 7 மூளைகளைக்கொண்ட நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இப்போது எங்கே?”

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

கெஸ்பேவ நகரத்தில் நேற்று “விருப்பப்படி ஆட்சியாளர்கள் - பட்டினியில் மக்கள்“ என்னும் தொனிப்பொருளில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அரசு எந்தவிதக் கவனத்தையும் செலுத்தவில்லை. நாட்டில் நண்பர்கள் கும்பல் மற்றும் பாரிய அளவிலான மாபியாக்கள் செயல்படுகின்றன.

அரசு நாளுக்கு நாள் மக்களை ஒடுக்கிக் கொண்டே செல்லுகின்றது. சிவில் உரிமைகள், பொருளாதார உரிமைகள், அரசியல் உரிமைகள் மற்றும் கலாசார உரிமைகள் உட்பட அனைத்து உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

மாறாக, மக்களுக்கு அசௌகரியத்தையும் வறுமையால் வாட்டுவதையுமே அரசு இன்று செய்கின்றது” - என்றார். (இ)

# மட்டு. மாவட்ட செயலகத்தில் நவராத்திரி விழா





மட்டக்களப்பு, ஒக். 16

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நவராத்திரி பூஜை நிகழ்வு நேற்று மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது.

மாவட்ட கலாசார பிரிவின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற நவராத்திரி பூஜை நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் கே.கருணாகரனின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

மாவட்ட செயலக பிரதம கணக்காளர் கே.ஜெகதீஸ்வரன், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளர் திருமதி இந்திராவதி மோகன், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.தயாபரன், மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ்குமார், மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகம் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

பஜனை வழிபாடுகளுடன் ஆரம்பமான பூஜையானது ஆலய பிரதம குரு சிவஸ்ரீ உத்தம ஜெயதீஸ்வர சர்மா குருக்களின் தலைமையில் நவராத்திரி பூஜை விசேட தீபாராதனையுடன் சகலகலா வள்ளி பாமாலை பாடப்பட்டு மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

மூவினங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த பூஜைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டமை இன நல்லுறவை வெளிக்கொணர்ந்ததோடு இனநல்லுறவை வலுப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

பூஜையின் நிறைவில் மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட அதிதிகளால் சிறார்களுக்கு புத்தகப் பைகள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மரண அறிவித்தல்



மலர்வு 12.01.1931 | உதிர்வு 11.10.2021

## திருமதி சிரோன்மணி சிங்கராஜா

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட சிரோன்மணி சிங்கராஜா அவர்கள் 11.10.2021 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும், திருநாவுக்கரசு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற சிங்கராஜா (அப்பா சாஸ்திரி) அவர்களின் அன்பு மனைவியும், காந்தி, பத்திரம், கண்ணன், சிவகிரி, காலஞ்சென்ற யமுனா ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திராதேவி (இந்திரம்) மற்றும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், முத்துப்பிள்ளை, சோதி, ராசம்மா, வேலாயுதம், சின்னராசு, குழந்தை ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலாவின் பெரிய தாயாரும், சாந்தி, சைலா, கிரிஜா, சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமியும்,சிந்துஜா, கங்காகர், செந்தூரன், சின்மஜி, பிரணவன், கார்த்திகா, பவதாரணி, சாகித்யா, ஆரணி, அகிரன், நந்தகுமார், அசோக்குமார் ஆகியோரின் அன்புப் பேத்தியும்,விதுஷா, பால்ராஜ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 16 Oct 2021 12:00 PM - 3:00 PM
Sunday, 17 Oct 2021 5:30 AM - 6:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Sunday, 17 Oct 2021 6:00 AM - 7:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Sunday, 17 Oct 2021 8:00 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கண்ணன் - மகன்
+16477107782

தகவல்:
குடும்பத்தினர்.







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
சிவஸ்ரீ.கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர் இந்து குருமார் அமைப்பு



7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- ஆதி
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-அரிய குளமும் அபிவிருத்தியும்



07.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
07.30 மணி: மனிதனின் மறுபக்கம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்




10.00 மணி : நெற்றிக்கண்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு